மலர்-4 இதழ்-98 செப்டம்பர் 16-30 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

இறைவன் இருக்கு இடம்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

e- book

www.aanmeegamalar.com
e- magazine
e- magazine

## ராஜவாழ்க்கை வாழும் ஸ்ரீரங்கநாதர்

# கிருஷ்ணர் கோவில்கள்

கிருஷணர் ஆலயங்கள் வட இந்தியாவில் மிகப் பிரபலமாக இருந்தாலும், தென்னிந்தியாவில் கேரள மாநிலத்திலும் அதிகளவு கிருஷ்ணர் கோவில்கள் இருக்கின்றன.

தமிழகத்தை பொறுத்தவரை பெருமாள், மகாவிஷ்ணு கோவில்கள் இருந்தாலும், கிருஷ்ணர் மூலவராக விளங்கும் கோவில்கள் ஐந்துதான் உள்ளது.



1. திருக்கண்ணங்குடி,
2. திருக்கண்ணமங்கை,
3. திருக்கோவிலூர்,
4. திருக்கண்ணபுரம்,
5. திருக்கபிஸ்தலம்,

இந்த 5 கோவில்களிலும் மூல வராக கிருஷ்ணர் வீற்றிருக்கிறார். மார்கழி மற்றும் புரட்டாசி மாதங்களில் சிறப்பு பூஜைகள் இங்கு நடைபெறுகிறது.

# ஆன்மிக மலர்கள்



- கோலமிடும் போது தெற்கே பார்த்து நின்று கொண்டு கோலமிடக் கூடாது.
- திருமணம் ஆன பெண்கள் ஒரே ஒரு விரலில் மட்டுமே மெட்டி அணிய வேண்டும். ஒரே காலில் இரண்டு மூன்று அணிய கூடாது. அணிவதால் ஆரோக்கியம் மற்றும் கணவனின் வளர்ச்சி (உடல், வருமானம்) பாதிப்பு அடையும்.
- கர்ப்பமான பெண்கள் உக்ர தேவதைகள் இருக்கும் கோவி லுக்கு போகக்கூடாது.
- பெண்கள் கிழக்கு திசையை நோக்கி குங்குமத்தை இரண்டு புருவ மத்தியிலும் உச்சந்தலையிலும் இட்டுக்கொள்ளவேண்டும். திருமணம் ஆகாதவர்கள், உச்சந்தலையில் இட்டுக்கொள்ள கூடாது.
- அமாவாசை, தவசம் ஆகியநாட் களில் வாசலில் கோலம் போடக் கூடாது.
- கோவில்களில் பிரஸாதமாகதரப் படும் துளசியை தலையில் வைத் துக் கொள்ளக்கூடாது.
- பெண்கள் எப்போதும் முந்தானையை தொங்க விட்டு நடக்கக் கூடாது.
- கோவிலில் தெய்வத்தை வணங்கும் பொழுது போது பின்னங்கால்கள் இரண்டையும் சேர்த்துக்கொண்டு முன் நெற்றி தரையில் படுமாறு மண்டியிட்டு வணங்கவேண்டும்.
- வெள்ளிக்கிழமைகளில், விஷேச நாட்களில் (பண்டிகை நாட்களில்) பாகற்காயை சமைக்க கூடாது. அவ்வாறு செய்வதால் பாவம் வந்து சேரும்.
- இரவு தூங்கப்போகும் போது, மனதிற்கு இதமான இசை, தெய்வீகம் சம்பந்தப்பட்ட காட்சிகளை பார்த்து விட்டு தூங்கினால், அமைதியான உறக்கம் கிடைக்கும். எதிர்மறையானவற்றை பார்க்கும்போது மனம் சஞ்சலம் ஏற்படும், நிம்மதியான உறக்கம் கெடும்.

# மனிதர்களை அழிக்கும் மூன்றுவித கர்வங்கள்



### 1. தன கர்வம்:

தன்னிடம் அதிகப்படியான செல்வம் இருக்கிறது என்ற காரணத்தால் வரும் கர்வம் தன கர்வம் ஆகும்.

### 2. வித்யா கர்வம்:

அதிகம் படித்ததால் ஏற்படும் இந்த கவர்வம் வித்யா கர்வம், தனக்குத்தான் எல்லாம் தெரியும், என்னைவிட யாரும் சிறந்த அறிவாளி இல்லை என்ற நினைப்பால் ஏற்படும் கர்வம்.

### 3. குல கர்வம்:

உயர்ந்த குலத்தில் பிறந்ததால் ஏற்படும் கர்வமாகும், தனக்கு கீழேதான் மற்றவர்கள் என்ற எந்த நினைப்பு வந்தாலும் அது குல கர்வமாகும்.

இந்த மூன்று கர்வங்களும் ஒரு மனிதனை எளிதாக அழித்துவிடும்.

# மகாலட்சுமி விரும்பும் மாதுளை

பெருமாள் பக்தனான மன்னன் பத்மாட்சன், காட்டிற்குச் சென்று தவ வாழ்வில் ஈடுபட்டான். அவனுக்கு காட்சியளித்த பெருமாள், அவன் விரும்பும் வரம் அளிப்பதாக கூறினார். மன்னன் அவரிடம், “எனக்கு லட்சுமி தாயார், மகளாக பிறக்க வேண்டும்,” எனக் கேட்டான். பத்மாட்சனிடம் ஒரு மாதுளம்பழத்தைக் கொடுத்து, “உன் விருப்பம் விரைவில் நிறைவேறும்,” என அருள்புரிந்தார் பெருமாள்.

மன்னனிடம் தரப்பட்ட அந்தக் கனி பெரிதாக வளர்ந்தது. வியப்படைந்த மன்னன், அதை உடைத்துப் பார்த்த போது, ஒருபுறம் மாதுளை முத்துக்களும், மறுபுறம் பேரழகு மிக்க பெண் குழந்தையும் இருப்பது கண்டு மகிழ்ந்தான். செந்தாமரை மலர் போல சிரித்த முகத்துடன் காட்சியளித்ததால் தன் மகளுக்கு 'பத்மை' என்று பெயரிட்டான். இந்த பெயரே இப்போது 'பத்மா' என திரிந்துள்ளது. மாதுளம் பழத்தில் இருந்து லட்சுமி தோன்றியதால், மாதுளை செடி இருக்கும் வீட்டில் லட்சுமி கடாட்சம் உண்டாகும். பெருமாளுக்கும், லட்சுமிக்கும் பூஜை செய்யும் போது, நைவேத்யமாக மாதுளம்பழம் வைப்பது சிறப்பு.




ஆன்மிகமலர் மெயில் புக்
16-30 செப்டம்பர் 2020 3
www.aanmeegamalar.com

# ராஜவாழ்க்கை வாழும் ஸ்ரீரங்கநாதர்

## முன்னோரின் பக்தியும் கட்டட கலையின் சிறப்பும்

வருடத்தின் 365 நாட்களும் திருவிழா போன்று விழாக்கோலத்தில் காட்சிதருபவர் ரங்கநாதப் பெருமாள் ஆவார். உலகில் இதுபோன்று 365 நாட்களும் திருவிழா காணும் தெய்வங்கள் வேறு ஏதும் இல்லை.

ரங்கநாதப்பெருமானை அரசனாகவே பக்தர்கள் பாவித்து வழிபடுகின்றனர். இன்றவும் கூட இறைவனை ராஜாவாக வணங்கும் ஸ்ரீரங்கத்தில் மட்டுமே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீரங்கநாதருக்கு செய்யப்படும் நெய்வேத்தியம் கூட மிகவும் சிறப்பு வாய்ந்த தாகும்.

மிகவும் அலாதியானதாகவும் இருக்கும்.

இவருக்கு ஹம்சை செய்யும் பிரசாதங்கள், பலகார பட்சணங்களை தயாரிக்கும் முறைகளும் வெகு பிரசித்தமானது.

இவருக்கு சமைக்கும் பாத்திரங்களும் ஒரு முறை மாத்திரமே பயன்படுத்துவர், மண் பாண்டங்களே பிரதானம். ஊறுகாய் கூட புதிதாக அன்றே தயாரிக்க படும்.

இவருக்கு அமுது ஹம்சை பண்ணப்படும் பட்டியல் நீண்டது, பெருமாளுக்கு கண்திருஷ்டி ஏற்பட்டுவிடும் என்பதால் பெரும்பாலும் இதை வெளியில் யாரும் சொல்வது கிடை யாது, தளிகை தயாரிப்பு முறைகளை முன்னோர்களால் கல்வெட்டுகளில் செதுக்கி வைத்து சென்றுள்ளனர். அதன்படி பார்த்தால்.

விடாய் பருப்பு, எரி துரும்பு ஆரம்பிக்கப் படுகிறது,

விடாய் பருப்பு என்றால் மொச்சைக் காய்,

எரி துரும்பு என்றால் விறகு,

இவையெல்லாம் கல்வெட்டுகளில் உள்ள வார்த்தைகள்.

வெள்ளிக்கிழமைகளில் மத்திய வேளையில் தளிகை ஹம்சைக்கு மொச்சை அவசியம், ஆனால் அன்று துவாதசி என்றால் கிடையாது.

திருவோணம் நட்சத்திரமானால் கட்டாயம் மிளகு சேர்க்க வேண்டும். இப்படி ஏகப்பட்ட வழிமுறைகள் கடைபிடித்துதான் பெருமாலுக்கு தளிகை ஹம்சை நடைபெறுகிறது.

துவாதசி பரணை என்றால் 21 காய்கறிகள் சேர்க்கப்படும், இஃது மத்திய வேளையில் மாத்திரமே.மற்றைய நாட்களில் வேறு முறை.

ஸ்ரீ ரங்கத்தில் மாத்திரம்

செடி ஐந்து,

கொடி ஐந்து,

காய் ஐந்து,

கனி ஐந்து

கீரைவகை ஐந்து என வகைப்படுத்தி தளிகை ஹம்சை நடக்கிறது.

காலை மற்றும் இரவு நேர தளிகை வேறு வகையான தளிகைகள் தயாரிக்கப்படும்.

இரவில் வெகு நிச்சயமாக தயிர், பச்சீயம், ஊறுகாய் வெண்ணெய் கிடையாது.

அதுபோலவே காலை வேளையில் தானிய வகைகள் கிடையாது.

இதுபோன்று தயாரிக்கப்படும் தளிகையில் தக்காளி, கேரட், பீன்ஸ், சோயா, முள்ளங்கி, முட்டைகோஸ், பீர்க்கங்காய், சுரைக்காய் போன்றவை இடம்பெறாது.

மஞ்சளை தவிர்த்து மற்ற கிழங்குகளான உருளை, சேனை, கருணை கிழங்கு போன்ற வற்றை பயன்படுத்தமாட்டார்கள்,

இந்த நடைமுறை இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

செடியில் விளையும் காய்கள் ஐந்தை சமைக்கும்போது, கொடிவகையில் உள்ள காய்கள் படுத்தமாட்டார்கள்.

உதாரணமாக செடி ஐந்து காய்களில் வெண்டை, சுண்டை, கத்தரி யோடு கொடி ஐந்து காய்களான அவரை மொச்சை கோவை போன்றவை தளிகையில் பயன்படுத்தமாட்டார்கள்.

இந்த முறையில் உண்ணப்படும் உணவுமுறை மனித வாழ்க்கையை நீண்ட காலத்திற்கு எடுத்துச் செல்வதுடன், உடல் நலத்திற்கும் பாது காப்பு தரும் முறை என்பதால், பெருமாளை அரசனாகவே வழிபட்ட நமது முன்னோர் இந்த முறையை பெருமாளுக்கு பயன்படுத்தி தளிகை தயாரித்து, அதை கல்வெட்டில் எழுதி வைத்து பின்வரும் சந்ததியினரும் கடைபிடிக்க அறிவுறுத்தியுள்ளனர்.

எப்பேர்ப்பட்ட வாழ்வியல் நெறியை கடைப் பிடித்து வந்துள்ளனர் நமது முன்னோர்கள். இதற்கு நா ருசி காரணம் அல்ல. நாராயணன் நாமத்தின் பால் உள்ள ருசி.

நாராயணனே நமக்கே பறை தருவான் என்று கோதை சொன்ன வார்த்தைக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. இங்கு பறை என்பது மேளம் அல்ல அளவை முறை. இன்றளவும் ஸ்ரீ ரங்கத்தில் நம்பெருமாள் நெல் அளவையை நேரில் வந்து பார்த்து செல்கிறார்.

பிரமோத்சவ காலங்களில் பத்து நாள் உத்சவத்தில் திருக்கொட்டாரம் வந்து நெல் அளவையை பார்வையிடுகிறார்.

இஃது உணவு பிரதானம் என்று





காட்ட அல்ல, பெருமாளின் மீது உள்ள பக்தி பரவசத்தால், பெருமாளுக்கு அவரை நாம் எப்படி கொண்டாட வேண்டும். என்று நம் முன்னோர் வாழ்ந்து காட்டியுள்ளனர்.

அரங்கன் இரவு வேளையில் சுக்கு திப்பிலி மிளகு தட்டி போட்டு பால் ஹம்ஸை நடக்கிறது. இதற்கு உண்டான பால் சுவையாக தித்திப்புடன் இருக்க வேண்டும் என எண்ணுகிறார். இளம் கரும்புகளை மாடுகளுக்கு உட்கொள்ள கொடுத்து அதன் மடியில் கறக்கும் பால் இனிப் பான விதத்தில் இருக்கும் என்று அவ்விதம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்.

இவை அனைத்தும் ஸ்ரீ ராமாநுஜர் கட்டளைப்படி கடைபிடிக்கப்பட்டு வரும் நடைமுறையாகும்.

இதைவிட ஒருபடி கோவிலை சுத்தமாகவும் சுகாதாரமாக வைக்க, பல்வேறு நடைமுறைகளை கடைபிடித்துள்ளனர்.

மேல்நாட்டு கல்விமுறையில் இன்றைய பல படிப்புகளுக்கு ஆசானாக நமது முன்னோர் பயன்படுத்திய விஞ்ஞான அறிவு விளங்குகிறது. ஆனால் பல காரணங்களுக்காக அவை தற்போது மறைக் கப்பட்டாலும், அவர்கள் பயன்படுத்திய உத்திகள் இன்றைய மேல்நாட்டு அறிஞர்கள், விஞ்ஞானிகளையே மலைக்க வைத்துள்ளது.

ஸ்ரீ ரங்கத்தின் மதில் சுவற்றில் ஏகப்பட்ட பொந்துகள் இருக்கும். இவை ஏதோ நீர் வரும் வழி என்றோ அல்லது பராமரிப்பு செய்ய உள்ள வழியோ இல்லை. அஃது பிரத்யேகமாக கோவிலை சுத்தமாக வைத்திருக்க நம் முன்னோரால் வடிவமைக்கப்பட்ட ஒன்றாக விளங்குகிறது.

ஆம் அவைகளை குறிப்பிட்ட வடிவில், அகலத்தில் குறிப்பிட்ட இடைவெளிகளில் செம் பூரான் கற்களைக் கொண்டு உள்ளே கடுக்காய் சித்திரத்தை அம்மான் பச்சரிசி இவைகளை கொண்ட கலவைகளை பூசி உண்டாகியுள்ளனர்.

இது எதற்கு என்றால் மரகதப் புறாக்கள் தங்க, மரகதப்புறாக்கள் இதுபோன்ற இடத்தில்தான் தங்கும் என்பதால், ரங்கநாதன் கோபுரத்தில் இதுபோன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மரகதப்புறாக்கள்தான் தமிழகத்தின் மாநிலப் பறவையாகும். இந்த புறாக்கள் அவ்வளவு சுலபமாக தன் இருப்பிடத்தை தேர்ந்தெடுக்காது. பல்வேறு விஷயங்கள் பரிசீலித்து பார்க்கும்.

இந்த வகை புறாக்கள் தான் தங்கும் இடத்தில் எச்சமிடாது, மேலும் எச்சமிடும் மற்றவகை பறவைகளை இது சேர்க்காது.

இந்த வகை புறாக்கள் மழைக்கு மூன்று நாழிகை முன்பாக அகவையிடும், (கத்தும்) அந்திசந்தி வேளையில் கத்தாது, மண் கறையான், சிலந்தி பாம்பு இவற்றை அண்ட விடாது. அதுபோலவே தேள் பூரான் குளவி இவற்றை விரட்டி விடும்.

இதுபோன்று கோபுரத்தை பாதுகாக்க எவ்வளவு அறிவுப்பூர்வமாக சித்தித்துள்ளனர் நம் முன்னோர்கள்.

ரங்கநாதன் மீது எவ்வளவு பக்தி இருந்தால் இதுபோன்ற நடைமுறைகளை நம் முன்னோர் கடைபிடித்து வாழ்ந்துவந்திருப்பார்கள்.





## குறைந்த அளவு மூச்சு விட பழகுங்கள்

# 100 வயதுவரை நோய் நொடியின்றி வாழலாம்

மனிதர்களின் ஆயுட்காலங்கள் தற்போது சராசரியாக குறைந்து வருவதால் இந்தியா போன்ற நாடுகளில் 75 வயது வரை வாழ்வதே மிகப்பெரிய அதிசயமாக மாறிவருகிறது.

ஆனாலும் மூச்சுப் பயிற்சியை சரியான முறையில் கடைபிடித்து வந்தால் 100 வயது வரை எந்த நோய் நொடியுமின்றி வாழ முடியும்.

இதற்கு சித்தர்கள் ஒரு மூச்சுப்பயிற்சி கணி தத்தை வகுத்துள்ளனர்.

அதன்படி ஒரு நிமிடத்திற்கு 15 முறை சுவாசிக்கும் அனைவரும் மிகச்சிறந்த ஆரோக் கியத்துடன் வாழலாம்.

ஒரு நாள் என்பது 24 மணி நேரமாகும், அதன் படி பார்த்தால் ஒரு நாளைக்கு 1440 நிமிடங்களை கொண்டுள்ளது. ஒரு நிமிடத்திற்கு 15 முறை சுவாதித்தால் 15x1440=21,600 வருகிறது.

இதன்படி ஒருநாளைக்கு 21,600 முறை சுவாசித்தால் உடல் ஆரோக்கியத்துடன் 100 ஆண்டுகளை சர்வ சாதாரணமாக வாழ்நாளை நீட்டிக்க முடியும். இந்த கணக்குப்படி பார்தால்

100 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சுகள் விட்டுள்ளான்.

93 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 16 மூச்சுகள் விட்டுள்ளான்.

87 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 17 மூச்சுகள் விட்டுள்ளான்.

80 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 18 மூச்சுகள் விட்டுள்ளான்.

73 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 19 மூச்சுகள் விட்டுள்ளான்.

66 ஆண்டுகள் வாழ்ந்தால், அவன் ஒரு நிமிடத்திற்கு 20 மூச்சுகள் விட்டுள்ளான்.

இந்த சுவாசப் பயிற்சியை தியானம், யோகம் கற்றவர்களிடமிருந்து அறிந்து கொண்டு செய்தால் சிறப்பு.

தற்போதைய கலியுகத்தில், அதுவும் வைரஸ் கிருமிகளின் பெருக்க காலத்தில் தியானம், யோகா போன்றவைகளையும், ஆயுர்வேத உணவு வகைகளுமே நம் வாழ்நாளை நிர்ணயிக்கும் அரு மருந்தாகும்.



# எட்டின் மகிமை

மனிதப் பிறப்பில் எட்டாவது மாதம் ஒரு திருப்புமுனை. தாயின் கருப்பையில் இருக்கும் குழந்தை அப்போதுதான் முழு வளர்ச்சியைப் பெறுகிறதாம். கருப்பையில் இடம்போதாமல் நெருக்கத்தில் சிக்கி, இருக்கும் இடத்துக்கு ஏற்ப தன்னுடைய கைகால்களை மடக்கிக்கொண்டு, உடல் உறுப்புகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முதல் அறிவை அப்போது தான் அந்தக் குழந்தை பெறுகிறது.

முற்பிறவியில் செய்த தீவினையால் தானே, ஒரு தாயின் கருப்பைக்கு வந்தோம். இந்தப் பிறவியில் தவறு ஏதும் செய்யக் கூடாது எனும் சிந்தனை ஞானம் ஏற்பவதும் 8வது மாதத்தில்தான் என்கிறது கீதை. ஆனால் பிறந்ததும் அந்த ஞானத்தை மனிதன் மறந்து போகிறான்.

மீண்டும் அந்த ஞானம் அவனுக்கு 80 வயதில் நிச்சயம் தோன்றுமாம். இதனாலேயே 8 எனும் எண்ணை ஞான எண்ணாகக் கூறுவார்கள். மாணிக்க வாசகர் அருளிய திருவாசகமும், எட்டு திங்களில் கட்டமும் பிழைத்தும்... என்று கருப்பையில் உள்ள 8 மாத சிசுவின் வடிவை, மிக அற்புதமாக விவரிக்கிறது. அதுசரி.. மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல, அந்த நடராஜ பெருமானே தன் கைப்பட எழுதிய பெருமை மிக்க நூலான திருவாசகம், பன்னிரு திருமுறைகளில் எந்தத் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது தெரியுமா? 8–வது திருமுறையாகத்தான்!

### அஷ்ட கணபதிகள்:

முழுமுதற் கடவுளாம் கணபதியை அஷ்டகணபதிகளாகவும் கொண்டாடுவர். ஆதி கணபதி, மகாகணபதி, நடன கணபதி, சக்தி கணபதி, வாலை கணபதி, உச்சிஷ்ட கணபதி, உக்ர கணபதி, மூல கணபதி ஆகிய அஷ்ட பிள்ளையார்களை வழிபட வினைகள் யாவும் நீங்கும் !

### அஷ்ட புஷ்பங்கள்:

புன்னை, செண்பகம், பாதிரி, வெள்ளெருக்கு, நந்தியாவர்தம், அரளி, நீலோத்பலம், தாமரை ஆகிய மலர்களை தெய்வ பூஜைக்கு சிறந்த அஷ்ட புஷ்பங்களாகப் போற்றுகின்றன ஞானநூல்கள் !

### திசை யானைகள் எட்டு:

ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் ஆகியவையே திசை யானைகள் 8 எனப் போற்றுகின்றன புராணங்கள் !

### அஷ்ட ஐஸ்வரியங்கள்:

தனம், தானியம், நிதி, பசு, புத்திரர், வாகனம், சத்தம், தைரியம் ஆகியன அஷ்ட ஐஸ்வரியங்களாகும். இறைசிந்தையும், அறவாழ்வும் இந்தச் செல்வங்களைப் பெற்றுத் தரும்.

### அஷ்ட பிரபந்தங்கள்:

மாலவனின் பெருமைகளை விவரிக்கும் நூல்களில் எட்டு குறிப்பிடத்தக்கவை. அவை: திருவரங்கக் கலம்பகம். திருவரங்கத்துமாலை. திருவாங்கத்து அந்தாதி, ஸ்ரீரங்கநாயகர்ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்து அந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி !

### அஷ்ட பந்தனம்:

சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன் மெழுகு, எருமை வெண்ணெய், குங்கிலியம், நற்காவி.... ஆகிய எட்டு பொருட்களுமே, ஆலயங்களில் விக்கிரக பிரதிஷ்டையில் பயன்படும் அஷ்ட பந்தனமாகும்.

### அட்டமா ஸித்திகள்:

தவமுனிகள் செய்யும் யோக முறையால் எட்டுவிதமான ஸித்திகளை அடையலாம். அற்புதமான அந்த ஸித்திகள்: அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் !

### அஷ்ட வசுக்கள்:

அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷன், பிரபாசன் ஆகியோரே அஷ்ட வசுக்கள் ! இவர்களில் பிரபாசன் என்பவனே, வசிஷ்ட முனிவரின் சாபத்தால் பூமியில் பிறந்து, பீஷ்மராகத் திகழ்ந்தான் !

### அஷ்ட வித்யேச்வரர்:

அநந்தர், சூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி ஆகியோரை அஷ்ட வித்யேச்வரர் எனப் போற்றுவர். இவர்கள் மாயைக்கு மேல் சுத்த வித்யைக்குக் கீழிருக்கும் புவனவாசிகள் என்கின்றன ஞானநூல்கள்.

### எட்டெட்டந்தாதி:

காஞ்சி ஸ்ரீகாமாட்சி அம்மனின் மீதான ஒரு பாடல் இது. எட்டெட்டு பாடலாக 64 செய்யுள்கள் அடங்கிய அந்தாதியாக திகழ்கிறது என்பார்கள். ஆனாலும், விநாயகர் வழிபாடாக முதலில் ஒரு பாடலும், செய்யுள் பலனாக கடைசியில் ஒரு பாடலும் அதிகம் உண்டு

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# கீர்த்திமிகு கிருபாச்சாரியார்

கௌதம முனிவரின் பேரன் சரத்வான். சரத்வான் பிறக்கும்போதே வில் அம்புகளுடன் பிறந்தவன். இளமைக்காலத்தில் வேதங்களைப் படிப்பதில் நாட்டமின்றி அனைத்து ஆயுதங்களையும் கற்றுத் தேர்ந்தான். அவனை விற்போட்டியில் யாராலும் வெல்லமுடியாதிருந்தது. இதனால் அச்சமடைந்த தேவர் மன்னன் இந்திரன் அவனது ஆற்றலை கட்டுப்படுத்த தேவலோக அழகி ஜனபதியை திருமணத்தை மறுக்கும் சரத்வானிடம் அனுப்புகிறான். அவளது அழகிய தோற்றத்தில் தனது மனதை பறிகொடுத்தாலும் அவனது தவ வலிமையால் காமத்தை எதிர்கொள்கிறான். இருப்பினும் அவனிடமிருந்து விந்து கீழே விழுகிறது. செடிகளில் விழுந்த விந்து, இரண்டாகப் பிளந்து ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பிறக்கிறார்கள். இதனை அறியாத சரத்வான் அங்கிருந்து தனது தவத்தைத் தொடர வேறிடம் செல்கிறான்.

ஒருமுறை சந்தனு மகாராஜா வனத்திற்கு வந்தபோது விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் அழைத்து வந்து தம் அரண்மனையில் வளர்த்துவந்தார். அவர் கிருபையுடன் (கருணையுடன்) அழைத்து வந்ததால் அக்குழந்தைகளுக்குக் கிருபர், கிருபி என்று பெயரிட்டு வளர்த்தனர்.

பின்னால் இதனை அறியவரும் சரத்வான் அரண்மனைக்கு வந்து தனது அடையாளத்தை நிலைநிறுத்தி குழந்தைகளுக்கு வில்வித்தை, வேதங்கள், சாஸ்திரங்கள் மற்றும் பிற உலக இரகசியங்களை கற்றுக் கொடுக்கிறான். கிருபர், தம் தந்தை சரத்வான் போலவே அஸ்திர வித்தைகளை நன்கு கற்றுத் தேர்ந்தார். தாம் கற்றறிந்தவற்றைப் பிறருக்கும் கற்றுத்தரும் ஆற்றலும் அவரிடம் இருந்ததை அறிந்த பீஷ்மர் அவரைப் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஆசிரியராக நியமித்தார்.

மகாபாரதத்தில் அஸ்தினாபுரம் அரசவையில் ராஜகுருவாக இருந்தவர். இவரிடம் 105 பேரும் வில்வித்தையை சரளமாகக் கற்றனர். இன்னும் மற்போர், போரில் வியூகம் அமைக்கும் முறை என பல கலைகளையும் கற்றுத்தந்தார் கிருபர். கிருபாச்சாரியாருக்கு ஒரு தங்கை உண்டு. பெயர் கிருபி. இவரைத் துரோணர் என்னும் பெரும் வில்வித்தையாளருக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தார்.

அஸ்வத்தாமன் க்ரிபரின் மருமகன். இதில் என்னவொரு விந்தை என்றால் மாமன் மருமகன் இருவருமே சிரஞ்சீவிகள். போர் முடிவில் கௌரவர்கள் தரப்பில் கிருபாச்சாரியார், அஸ்வத்தாமன், கிருதவர்மன், கர்ணனின் மகன் விருச்சகேது ஆகிய



நால்வர் மட்டுமே உயிருடன் எஞ்சினர். பாண்டவர் தரப்பில் ஐந்து பாண்டவர்கள், ஸ்ரீகிருஷ்ணர், சாத்யகி மற்றும் யுயுத்சு ஆகிய எட்டு பேர்கள் மட்டும் உயிருடன் எஞ்சினர்.

கிருபர் அஸ்தினாபுரத்தில் அனைவராலும் போற்றத் தக்கவராக வாழ்ந்தார். குரு வம்சத்தின் கடைசி வாரிசான அபிமன்யுவின் மகனான பரிக்ஷித்துக்கு எல்லா கலைகளையும் கற்றுக்கொடுத்தது இவர்தான். கிருபர், துரியோதனனிடம் நன்றியுடன் வாழ்ந்து வந்தவர், மகாபரதப் போரில் கௌரவப் படையின் பதினோறு படைத்தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

துரியோதனின் வீழ்ச்சியால் மனம் கொதித்த அஸ்வத்தாமா, பாண்டவர்களை வேரோடு அழிக்க நினைத்தான்.

கிருபர் அவனுக்குப் பல அறிவுரைகளைக் கூறினார். "துரியோதனன் பெரியோர்களை மதிக்கத் தெரியாதவனாக, பலரால் தூண்டப்பட்டுத் தவறான பாவச்செயல்களைச் செய்தான். ஆகையால் அவன் இந்த நிலையை அடைந்தன். நாமும் அவனைப் போல, நடந்தால் நமக்கு அவனுடைய நிலையே கிடைக்கும், நாம் திருதராஷ்ட்ர மன்னனைக் கலந்து ஆலோசித்துவிட்டு, அவர்கள் சொல்படி நடப்போம்" என்றார். கிருதவர்மா என்ற யாதவ மன்னரும் அவ்வாறே கூறினார். ஆனால், கிருபரின் யோசனையை அவன் ஏற்கவில்லை.

8 ஆவது மன்வந்தரத்தில் சப்த ரிஷிகளில் ஒருவர் அது மட்டுமில்லாமல் இந்த கலியுகத்தில் ரிஷிகளில் முதன்மையானவராக கருதப்படுகிறார். இவர் ஒரு மகாரதி. 12 அதிரதிகளுக்கு சமானமானவர். 7,20,000 வீரர்கள் கொண்ட படைகளுடன் மோதும் வலிமை பெற்றவர். உண்மை, நியாயம், சட்டம், ஒழுக்கம், நெறிமுறைகள் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக மிகவும் நெருக்கடியான சூழ்நிலையிலும் கௌரவர்கள் சபையில் விளங்கினார். அதனால் இன்றும் சிரஞ்சீவியாக போற்றப்படுகிறார். காலை ஸ்நானம் செய்யும்போது இந்த ஏழு பேரை சொல்லி உச்சரியுங்கள்)

அஸ்வத்தாமா பலிர் வ்யாஸோ ஹநுமான் ச விபீஷண:

க்ருப பரசுராமஸ்ச சப்தை தே சிரஞ்சீவன:

அஸ்வத்தாமன், பலி, வியாஸர், ஹநுமான், விபீஷணன், க்ருபர், பரசுராமர் ஆகிய எழுவரும் சிரஞ்சீவிகள்.

எவர் ஒருவர் கோழைத்தனம் இல்லாமலும், தைரியத்துடன் நேர்வழியிலும் போரிடுகிறார்களோ, அவர்கள் கிருபரின் அம்சமாக பார்க்கப்படுவார்கள். இவருக்கான காயத்ரி மந்திரம்...

"ஓம் தனுர்வித்யாய வித்மஹே ராஜ தர்மாய தீமஹி

தந்நோ க்ருப்பாச்சார்ய ப்ரசோதயாத்"

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593



# இறைவன் இருக்கு இடம்

## திருமூலர் வகுத்த கணக்கு

உலகில் வாழும் உயிர்களின் வடிவத்தைச் சொல்ல வந்த திருமூலர் ஓர் அதிசயமான கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

ஒரு மாட்டின் முடியை எடுத்து ஆயிரம் கோடி இழைகளாகப் பகுப்பது பற்றிப் பேசுகிறார். இதுவும் அணுவைப் பிளப்பது போலத்தான். ஒரு மாட்டின் முடியை எடுத்து அதை நூறு கூறாக்கச் சொல்கிறார். பின்னர் அதிலிருந்து ஒரு முடியெடுத்து ஆயிரம் கூறாக்கச் சொல்கிறார். அவ்வாறு ஆயிரம் கூறு போட்டதில் ஒரு முடியை எடுத்து அதை நூறாயிரம் கூறுபோடச் சொல்கிறார். இதுதான் ஆன்மாவின் வடிவம் என்கிறார்.

""மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவியது கூறது ஆயிரமானால்
ஆவியின் கூறு நூறாயிரத்தொன்றாமே"

– திருமந்திரம், சீவன், பா.2011

100 x 1000 x 100,000 = 100 000 00 000
=0. 00 000 00 0001

அதாவது, ஒரு மாட்டின் முடியை ஆயிரம் கோடி இழைகளாகப் பகுப்பது பற்றிப் பேசுகிறார். இவர் அணுவைப் பிளப்பதை மனக்கண்ணில் கண்டுள்ளார்.

ஒரு கடுகில் 32,768 அணு என ஒரு பழந் தமிழ்ப் பாடல் அணு பற்றிய தமிழர்களின் அறிவை விளக்குகிறது.

"அணுத்தேர்த்துகள் பஞ்சிற்றூய் மயிரன்றி
மணற்கடுகு நெல் விரலென்றேற
வணுத்தொடங்க
யெட்டோடு மன்னு விரற் பன்னிரண்டார்
சாணாக்கி
லச்சாணிரண்டு முழமாம்"

8 அணு = ஒரு தேர்த்துகள்
8 தேர்த்துகள் = ஒரு பஞ்சிழை
8 பஞ்சிழை = ஒரு மயிர்
8 மயிர் = ஒரு மணல்
8 மணல் = ஒரு கடுகு = 2,62,144 அணுக்கள்,
8 கடுகு = ஒரு நெல்
8 நெல் = ஒரு விரல்
8 12 விரல் = ஒரு சாண்
2 சாண் = ஒரு முழம் = 4,02,65,31,184 அணுக்கள்
4 முழம் = ஒரு கோல்
500 கோல் = ஒரு கூப்பீடு
4 கூப்பீடு = ஒரு காதம்

தற்போதைய விஞ்ஞானம் ஒரு ஹைட்ரோஜென் (Hydrogen) அணுவின் சுற்றளவு. 0.000000212 ம் ஹைட்ரோஜென் எனப் பிரித்திருக்கின்றது.

இப்பொழுது நாம் திருமூலர் கூற்றுப்படி கணக்கிட்டுப் பார்ப்போம். ஒரு மனிதனின் முடியானது 4080 மைக்ரோன் (Micron) ஆக உள்ளது. பசுவின் முடியானது சிறிது அடர்த்தியாகவே இருக்கும். எனவே, நாம் 100 மைக்ரோன் என்றே எடுத்துக் கொள்வோம்.

பசு மாட்டு மயிரின் உரு அளவு =100 மைக்ரோன் Size of an hair 100 Miicron

100 மைக்ரோன் = 0.1 மில்லிமீட்டர் 100 micron 0.1 Millimeter..

இப்பொழுது திருமூலர் கூறியவாறு பசு மாட்டின் ஒரு முடியை நூறாகப் பிரிப்பதாக எடுத்துக்கொள்வோம்.

0.1/100=0.001 மில்லி மீட்டர் (MM) அதை ஆயிரமாகப் பிரிப்பதாக எடுத்துக் கொள்வோம். 0.001/1000= 0.000001 மில்லி மீட்டர். இதை நாம் (100,000) நூறாயிரமாகப் பிரிப்பதாக எடுத்துக் கொள்வோம்.

0.000001/100 000 = 0.00000000001 மில்லிமீட்டர் (MM) இதையே உயிரின் உருவத்தின் அளவாக இருக்கின்றது என்கிறார் திருமூலர். ஆகவே, திருமூலர் உயிரின் அளவாகக் குறிப்பிடுவது சராசரியாக 0.00000000001 (MM) மில்லிமீட்டர்.

அணுவின் சுற்றளவு 0.000000 212 (MM)-

ஹைட்ரோஜென். ஆனால், திருமூலர் அதற்கும் கீழே சென்று உயிரின் அளவாக, 0.00000000001யைக் குறிப்பிடுகின்றார்.

கடவுளின் வடிவம்:

"அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவில் அணுவை அணுகவல் லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே"

–திரு.புருடன்2008

அணுவிற்குள் அணுவாகவும் அதற்கப்பாலும் இருப்பவன்தான் இறைவன். அப்படி அணு விற்குள் அணுவாய் உள்ளதை ஆயிரம் கூறு செய்து, அவ் ஆயிரத்தில் ஒரு கூறினை நெருங்க வல்லார்க்கு அணுவிற்குள் அணுவாய் இருக்கின்ற இறைவனை அணுகலாம்.

உயிருக்கு கூறப்பட்ட வடிவத்தை ஆயிரம் கூறுகளாக்கிக் கிடைப்பது இறைவன் வடிவம் என்று கூறுகின்றார்.

100*1000*100 000 *1000=100 000 00 000 000 = 0.00 000 00 0000001

அணுவுக்குள் அணுவாக மனிதனின் உயிர் இருப்பது என்றும், அந்த உயிர் அணுக்களின் உள்ளீடாக ஆயிரத்திற்கும் மேலான அணுப் பிளப்பில் இறைவன் இருப்பதாகக் கூறுகின்றார்.

ஐந்தாம் நூற்றாண்டிலேயே அணுவைப் பிளக்கமுடியும் என்றும், அந்தப் பிளக்கப்படும் அணுவிற்குள் மனித உயிர் இருப்பதாகவும், அதை ஆயிரம் மடங்கிற்கும் மேல் பிளக்கும்போது அதில் இறைவன் இருக்கிறான் என்றும் திருமூலர் கூறியிருக்கின்றார்.

# ஐயனார்

அய்யனாரை பல இடங்களில் பல பெயர்களில் வழிபடுகிறார்கள் இவை காரண பெயராகவோ அல்லது ஊர் பெயரை கொண்டு அமைந்துள்ளதுதோ அவை களில் ஒரு சில பிரபலமான பெயர்களைப் பார்ப்போம்.

1 கரையடி காத்த அய்யனார்
2 அடைக்கலம் காத்த அய்யனார்
3 நீர்காத்த அய்யனார்
4 அருஞ்சுனை காத்த அய்யனார்
5 சொரிமுத்து அய்யனார்
6 கலியணான்டி அய்யனார்
7 கருங்குளத்து அய்யனார்
8 குருந்துடைய அய்யனார்
9 இளம்பாளை அய்யனார்
10 கற்குவேல் அய்யனார்
11 கொண்னறயான்டி அய்யனார்
12 செண்பகமூர்த்தி அய்யனார்
13 திருவேட்டழகிய அய்யனார்
14 சமணர்மலை அய்யனார்
15 கூடமுடைய அய்யனார்
16 சிறை மீட்டிய அய்யனார்
17 எட்டிமுத்து அய்யனார்
18 செகுட்ட அய்யனார்
19 வெட்டுடைய அய்யனார்
20 மருது அய்யனார்
21 வேம்பூலி அய்யனார்
22 நிறைகுளத்து அய்யனார்
23 ஆதிபுதிரங்கொண்ட அய்யனார்
24 சித்தகூர் அய்யனார்
25 பிரண்டி அய்யனார்
26 வீரமுத்து அய்யனார்
27 பாலடி அய்யனார்
28 தந்தலை வெட்டி அய்யனார்
29 கருமலை காத்த அய்யனார்
30 அல்லல் தீர்த்த அய்யனார்
31 ஹரி இந்திர அய்யனார்
32 காடைபிள்ளை அய்யனார்
33 செல்லப் பிள்ளை அய்யனார்
34 வீர பயங்கரம் அய்யனார்
35 மாணிக்கக் கூத்த அய்யனார்
36 வணங்காமுடி அய்யனார்
37 குன்னிமலை அய்யனார்
38 தூத்துவான் அய்யனார்
39 மாநாடு அய்யனார்
40 தலையூனி அய்யனார்
41 பொன்வண்டு அய்யனார்
42 பலவேசம் அய்யனார்
43 மருதமலை அய்யனார்
44 அல்லியூத்து அய்யனார்
45 வன்னிய அய்யனார்
46 எரிச்சீஸ்வர அய்யனார்
47 சுனை அய்யனார்,
48 வில்லாயுதம் உடைய அய்யனார்
49 கோச்சடை அய்யனார்
50 மக்கமடை அய்யனார்
51 வீரப்ப அய்யனார்
52 மஞ்சனீஸ்வர அய்யனார்
53 வெங்கலமூர்த்தி அய்யனார்
54 குரும்புடைய அய்யனார்
55 நீதியுடைய அய்யனார்
56 ஈடாடி அய்யனார்
57 செவிட்டு அய்யனார்
58 தேன்மலையாண்டி அய்யனார்
59 கலியுகமெய் அய்யனார்
60 கரந்தமலை அய்யனார்
61 பனையூருடைய அய்யனார்
62 அதிராம்சேரி அய்யனார்
63 மலம்பட்டி அய்யனார்
64 ஜடாமுனி அய்யனார்
65 ராசவெலி அய்யனார்
66 பொய் சொல்லாத மெய் அய்யனா
67 அலங்கம்பட்டி அய்யனார்
68 புரோவர்த்தி அய்யனார்
69 ஐந்துமுடை அய்யனார்
70 அதினமிளகிய அய்யனார்
71 ஒடக்குலம் அய்யனார்
72 பாலாறுகொண்ட அய்யனார்
73 குன்னக்குடி அய்யனார்
74 குலம் அய்யனார்
75 வலையங்குளம் அய்யனார்
76 கருகப்பிள்ளை அய்யனார்
77 வெள்ளிமலை அய்யனார்
78 கருக்காச்சி அய்யனார்
79 பெரியகுளம் அய்யனார்
80 வளையங்குளம் அய்யனார்
81 செல்லபட்டி அய்யனார்
82 கடவுகாத்த அய்யனார்
83 செங்கமடை அய்யனார்
84 நல்லூடைய அய்யனார்
85 வல்லகுடி அய்யனார்
86 இடமறை அய்யனார்
87 சுண்டைக்காட்டு அய்யனார்
88 கூத்தினிகாட்டு அய்யனார்
89 வெள்ளவேடு அய்யனார்
90 அம்மச்சி அய்யனார்
91 நாகலிங்க அய்யனார்
92 உத்தம அய்யனார்
93 வெள்ளை வீர அய்யனார்







94 பெரியசாமி அய்யனார்
95 மூர்த்தி அய்யனார்
96 வேலங்கி அய்யனார்
97 சுயம்புலிங்க அய்யனார்
98 பராக்கிரப்பாண்டிப்பேரி அய்யனார்
99 வெற்றிவேல் அய்யனார்
100 ஐந்தருவி அய்யனார்
101 அழகிய அய்யனார்
102 குளத்தூ அய்யனார்
103 செம்புலி அய்யனார்
104அகலிகைசாபம்தீர்த்த அய்யனார்
105 படியேறும் அய்யானர்
106 குறும்பண்ட அய்யனார்
107 பேயாண்டி அய்யனார்
108 ஆறுமுக அய்யனார்
109 திருக்கோட்டி அய்யனார்
110 ஆதீனமிளகிய அய்யனார்
111 ஆனைமேல் அய்யனார்
112 வெங்கலமுடி அய்யனார்
113 சாகத அய்யனார்
114 வட்டத்தாழி அய்யனார்
115 பொன் அய்யனார்
116 புலியாண்டி அய்யனார்
117 சாத்த அய்யனார்
118 நடுவுடைய அய்யனார்
119 வேலடிபண்ணை அய்யனார்
120 சின்ன அய்யனார்
121 தேத்தாம்பட்டி மலையாண்டி அய்யனார்
122 வெள்ளுடைய அய்யனார்
123 வீரமலைஅய்யனார்
124 சோலைமலை அய்யனார்
125 குருவீரப்ப அய்யனார்
126 மஞ்சமலை அய்யனார்
127 செருவலிங்க அய்யனார்
128 சுண்டக்காட்டு அய்யனார்
129 அழகியவரத அய்யனார்
130 களத்திருடைய அய்யனார்
131 கலியுகவரத அய்யனார்
132 தண்டீஸ்வர அய்யனார்
133 வெள்ளந்திருவரசு வரத அய்யனார்
134 கரும்பாயிரம் கொண்ட அய்யனார்
135 நலமுத்துஅய்யனார்



136 குன்னம் அய்யனார்
137 இராஜவளவண்டஅய்யனார்
138 பரமநாதஅயயனார்
139 பழங்குளத்து அய்யனார்
140 கொடைமுகி அய்யனார்
141 கரைமேல்அழகர் அய்யனார்
142 சிறைகாத்த அய்யனார்
143 மழைகாத்த அய்யனார்
144செல்வராய அய்யனார்
145 திருமேனி அய்யனார்
146 நல்லசேவு அய்யனார்
147 பூங்காவிடை அய்யனார்
148 முத்துபிரம்ம அய்யனார்
149 மெய்சொல்லி அய்யனார்
150 கலிதீர்த்த அய்யனார்
151 பெருவேம்பு அய்யனார்
152 தோளப்ப அய்யனார்
153 மோக்கமுடைய அய்யனார்
154 மெய்ஞானமூர்த்தி அய்யனார்
155 வளமுடைய அய்யனார்
156 கொத்தவல்லிஅய்யனார்
157 மஞ்சள்கூத்த அய்யனார்
158 கட்டியப்பஅய்யனார்
159 ஒலைகொண்ட அய்யனார்
160 நல்லகுருந்த அய்யனார்
161 பந்தமாணிக்க அய்யனார்

162 செல்லக்குட்டி அய்யனார்
163 காரியழகர் அய்யனார்
164 ஆலமுத்து அய்யனார்
165 சாம்பக மூர்த்தி அய்யனார்
166 வள்ளாள கண்ட அய்யனார்
167 குழந்தி அய்யனார்
168 கூரிச்சாத்த அய்யனார்
169 திருவீதிகொண்ட அய்யனார்
170 சிங்கமுடைய அய்யனார்
171 பொய்யாழி அய்யனார்
172 பிழைபொறுத்த அய்யனார்
173 வினைதீர்த்த அய்யனார்
174 வலதுடைய அய்யனார்
175 துல்லுக்குட்டி ஐயனார்
176 நீலமேக அய்யனார்
177 முடிபெருத்த அய்யனார்
178 மருதய அய்னார்
179 உருவடி அய்யனார்
180 பெருங்காரையடி மீண்ட அய்யனார்
181 பாதாள அய்யனார்
182 வழிகாத்த அய்யனார்
183 கருத்தக்காட்டு அய்யனார்
184 சுந்தரசோழ அய்யனார்
185 கீழ அய்யனார்
186 வடக்க அய்யனார்
187 திருவரசமூர்த்தி அய்யனார்



கீதா–ராஜன்

188 மைந்தனைக் காத்தாடையப்ப அய்யனார்
189 தாடையப்ப அய்யனார்
190 தொண்டமண்டலஅய்யனார்
191 இராம அய்யனார்
192 பெத்தபாட்டைஅய்யனார்
193 செல்லமுத்துஅய்யனார்
194 முதலியப்பஅய்யனார்
195 மருதப்பஅய்யனார்
196 பணங்காடி அய்யனார்
197 சேவூராயஅய்யனார்
198 கண்ணாயிரமூர்த்தி அய்யனார்
199 தொரட்டை அய்யனார்
200 சுப்பாணிகூத்த அய்யனார்
201 வழியடி அய்யனார்
201 காரியப்பஅய்யனார்
202 பொற்கண்டஅய்யனார்
203 துள்ளுவெட்டி அய்யனார்
204 கூரிச்சாத்த அய்யனார்
205 கிளிக்கூண்டு அய்யனார்
206 நல்லி அய்யனார்
207 ஈடாடி அய்யனார்
208 ஆதி அய்யனார்
209 பரமநாத அய்யனார்
210 ஸ்ரீ புலிக்கரை அய்யனார்
211 தடி கொண்ட அய்யனார்
212 குறுமலை பொய்யாலப்பன் அய்யனார்
213 அரியசுவாமி அய்யனார்
214 காரிய அய்யனார்
215 வெள்ளந்தாங்கி அய்யனார்
216 ஏரமுடி ஐயனார்
217 செங்கொழுந்து ஐயனார்
218 பொய்யாடமூர்த்தி ஐயனார்
220 பெருவேம்புடையார் சாஸ்தா
221 சமூகமடம் குளத்தய்யன் சாஸ்தா
222 அரிகரபுத்திர சாஸ்தா
223 குளகக்ரைசாஸ்தா
224 மடையுடையார் சாஸ்தா
225 கலைக்காவுடையார் சாஸ்தா
226 வேம்படி சாஸ்தா
227 எம்பெருமாள் சாஸ்தா
228 தர்ம சாஸ்தா
229 மருதவுடையார் சாஸ்தா

230 சௌந்தரிய சாஸ்தா
கரையடி காத்த அய்யனார்
கரையடி காத்த அய்யனார்
231 அய்யனார்பட்டி சாஸ்தா
232 மருங்கய்யன் சாஸ்தா
233 மேகமுடையார் சாஸ்தா
கரையடி காத்த அய்யனார்
கரையடி காத்த அய்யனார்
234 மருது உடையார் சாஸ்தா
235 சடையுடையார் சாஸ்தா
236 பூனுடையார் சாஸ்தா
237 வடமலை சாஸ்தா
238 பனையடியான் சாஸ்தா
239 எட்டுடையார் சாஸ்தா
240 ஹரிஹரபுத்திர சாஸ்தா
241 பட்டமுடையார் சாஸ்தா
242 தெற்கு உகந்த உடையார் சாஸ்தா
243 குளத்தூராயன் சாஸ்தா
244 கோயில் குளம் சாஸ்தா
245 மடையுடையார் சாஸ்தா
246 குளத்தூராய்யன் சாஸ்தா
247 தலைக்காவுடையாயார் சாஸ்தா
248 காரிசாஸ்தா கரவுடையார் சாஸ்தா
249 காரியமுடையார் சாஸ்தா
250 உலகுடையார்சாஸ்தா
கரையடி காத்த அய்யனார்
கரையடி காத்த அய்யனார்
251 அஞ்சனமெழுதிய கண்டன் சாஸ்தா
252 காரி அய்யன் சாஸ்தா
253 சடையுடைய கண்டன் சாஸ்தா
254 வெட்டுவெண்ணி கண்டன் சாஸ்தா
255 பிராஞ்சேரி கண்டன் சாஸ்தா
256 புன்னார்குளம்சாஸ்தா
257 ஊருக்குடைய கண்டன் சாஸ்தா
258 நயினார் உதய கண்டன் சாஸ்தா
259 புதுக்குளம் கண்டன் சாஸ்தா
260 பொன்னாயிரமுடைய கண்டன்சாஸ்தா
261 சடையுடைய கண்டன் சாஸ்தா
262 கான சாஸ்தா
263 குடமாடிசாஸ்தா
264 சுரைக்காவல் அய்யன் சாஸ்தா
265 அரி கோவிந்த சாஸ்தா

# புதிய ஆனந்தம்தான் இறைவன்

(1941 ஜூலை 15 அன்று கலிஃபோர்னியாவில் ஆற்றிய சொற்பொழிவு.)

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் கூறுகிறார்: "இறை அனுபூதி, யோகியின் பங்கிலுள்ள பெரு முயற்சியினாலும், தெய்வ அருளினாலும் மட்டுமே அடையப்படுகிறது. விதிமுறைகளின் மூலம் இறைவனை அடைய முடியுமானாலும், 'நல் இதயங்களைத் தேடுபவன்' என்ற வகையில், அவன் தன் அருளை அளிப்பதற்கு முன், ஒரு பக்தன் உண்மையாகவே தன்னை வேண்டுகிறான், என அவன் நம்பவைக்கப்பட வேண்டும். ஒரு பக்தன் யோக விஞ்ஞானத்தில் எவ்வளவுதான் முழுமை பெற்றிருந்தாலும், தன்னை முழு இதயத்துடன் விரும்பாமல் இருக்கும் அவனுக்கு இறைவன் இறுதி ஞானத்தை வழங்காமல் நிறுத்திக்கொள்கிறான்".



மேலும் அவர் தன்னுடைய ஓர் நிகழ்வினை கூறுகிறார்: "நான், என்னுடைய குரு, ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரருடைய ஆசிரமத்தில் ஒவ்வொரு மாதமும் மிகப்பெரும் பக்தியுடன் இறைவனை நாடிக்கொண்டிருந்த காலத்தை நினைவு கூருகிறேன். இருந்தாலும் ஒருவித முன்னேற்றமின்மையை நான் அனுபவித்தவண்ணம் இருந்தேன். எனது குருதேவரிடம் எனது பிரச்சனையைக் குறித்து வினவியபோது அவர் கூறினார், " உன்னிடம் அதிக மனோசக்தி அல்லது சித்தி ஆற்றல் இருந்தால், இறைவன் உன்னிடம் இருக்கிறான் என்பதை நீ வெகு முழுமையாக அறிந்து கொள்வாய் என நீ நினைக்கின்றாய். ஆனால் அது அவ்வாறில்லை. இந்த முழுப் பிரபஞ்சத்தின் கட்டுப்பாட்டை உனக்கு அளிப்பதின் வாயிலாக அவன் பதிலளிக்கிறான் என வைத்துக் கொள்வோம். இத்தகைய சக்தியை பெற்றிருந்தாலும், அது உன் இதயத்தை இன்னும் திருப்தி அடையச் செய்யாது. நீ தியானத்தில் ஏற்கனவே உணரும் என்றும் புதிய ஆனந்தம்தான் இறைவன். மனிதன் இவ்வுலகத்தில் அந்தப்பேரானந்தத்தை வேறு எதையும்விட அதிகமாக நேசிக்கும் போது, பணத்தையும், புகழையும் விட அதிகமாக வெவ்வேறு மனநிலைகளிலும், பழக்கங்களிலும் மற்றும் புலன் அனுபவங்களிலும் அவன் நுகரும் இன்பத்தைவிட அதிகமாக நேசிக்கும்போது இறைவன் வழியைத் திறப்பான்." ஒரு சில பக்தர்களே இத்தகைய தியாகங்கள் செய்யத் தயாராக உள்ளனர். இறைவனை மகிழ்விப்பது ஒரே சமயத்தில் வெகு சுலபமானதும், வெகு கடினமானதும் ஆகும் அவன் சோதனைகளின்போதுகூட, தனது பக்தர்களுடன் திருவிளையாடல் புரிகிறான். மேலும் அவன் அவர்களை எந்நேரமும் சோதிக்கிறான்."

**90**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

"ஒரு நாளை முட்டாள்தனத்தினால் நிரப்புவது எவ்வளவு சுலபமானது; அதனைப் பயனுள்ள செயல்களாலும் எண்ணங்களாலும், நிரப்புவது எவ்வளவு கடினம்? இருப்பினும் இறைவன், நமது மனம் எங்கு இருக்கிறது என்பதை விட, நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதில் அதிக அக்கரை காட்டுவதில்லை. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான பிரச்சனை உள்ளது. ஆனால் இறைவன் எந்த சாக்குபோக்குகளையும் செவிமடுக்கமாட்டான். எந்த தொல்லை தரும் சூழ்நிலைகள் இருந்தாலும், பக்தனுடைய மனம் அவனுள் ஆழ்ந்திருக்கவேண்டும் என அவன் விழைகிறான். நான் இப்பொழுது உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதில் ஈடுபட்டிருந்தாலும் என் மனம் எப்பொழுதும் இறைவன் மீதே உள்ளது. நான் எல்லா நேரமும் உள்முகமாக அவனுடன் இருக்கிறேன். நான் அவனுடைய பேரானந்தத்தில் வாழ்கிறேன். வேறு எதையும் அல்லாமல், அவனுடைய ஆனந்தத்தை மட்டும் நேசித்துக்கொண்டும், யாசித்துக் கொண்டும் இருப்பதனால், இறை ஐக்கியத்தை அடைய குறுக்கிடும் எல்லாத் தடைகளும் என் முன்னர் விலகிவிடுகின்றன என்பதை நான் காண்கிறேன். இந்தப் பிரகடனம் ஒரு தேவதைக் கதை அல்ல; இது உண்மை, ஆனால் இறைவன், பக்தனின் முழு அன்பையும் பெறும்வரையில் வர மாட்டான். சில சமயங்களில் அவன் நம்மைக் கைவிட்டு விட்டதுபோல் தோன்றும். ஆனால் இத்தகைய சோதனைகள் தப்பிக்க முடியாதவை. நமது தேடலைக் கைவிட உறுதியாக மறுத்தால், இறைவன் நம்மை அவனுடைய சொந்தமாக ஏற்றுக்கொள்வான். உலக ஆசைகளில் எப்பொழுதும் சிறிது நிச்சயமற்ற தன்மை இருக்கும். சிலர் பொருள் ஈட்டுதலில் முழுமனதுடன் முயன்று ஆனால் வெற்றியின்றி வருடங்களைக் கழிப்பார்கள். ஆனால், ஆன்மீகப்பாதையில் முழுமனதுடன் உள்ள எந்த பக்தனும் என்றுமே வெற்றி பெறாதவனாக இல்லை. அவனுடைய உழைப்பு ஒருபோதும் வீணாவதில்லை" என்கிறார் குருதேவர்.



குருப்ரியா

'இறைவனை இப்பொழுதே தேடுங்கள்' என்று குருதேவர் வலியுறுத்திக் கூறுகிறார்; உதாரணமாக கோவிலில் தீபாராதனை முடிந்தபின்னர் 'பிரசாதம்' கொடுப்பார்கள். பிரசாதம் கொடுக்குமிடத்திலிருக்கின்ற பக்தர்களுக்கு மட்டும்தான் பிரசாதம் கொடுத்து முடிந்தபின்னர் அவ்விடத்திலிருக்கின்ற பக்கதர்களுக்குமட்டும் தான் அது கிடைக்கும்.

பிரசாதம் கொடுத்து முடிந்தபின்னர் அவ்விடத்திற்குச் செல்பவர்களுக்குப் பிரசாதம் கிடைக்காது. அதுபோலவேதான், மனிதனாகப் பிறவியெடுத்து பூமியில் வந்தாகிவிட்டது. வந்த பின்னர் ஒரு மனிதன் செய்ய வேண்டியதைக் கண்டிப்பாகச் செய்துதான் ஆக வேண்டும். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பர். அது போன்று நமக்கு வாய்ப்பு கொடுத்துள்ளான் இறைவன். அந்த வாய்ப்பினை நழுவ விடாமல் நாம் செய்ய வேண்டியவற்றைச் சரியாகச் செய்ய வேண்டும்.

நமக்கு இறைவன் விவேகத்தை அருளியிருக்கிறாள். இந்த விவேகத்தை பயன்படுத்தி வாழ்க்கையை ஒளிரச் செய்யவேண்டும். விவேகம் ஆசைகளை துரத்தும். இறைவனை அறியக்கூடிய அறிவைத்தான் விவேகம் என்பர். அத்துடன் நல்ல விஷயங்களைச் சிந்திப்பதற்கும் விவேகம் மிகவும் அவசியம். இறைவன் சம்பந்தப்பட்ட ஆழ்ந்த சிந்தனையை உருவாக்கும். இந்தப் பிரபஞ்சத்தில் அது ஒன்றுதான் மிகவும் உன்னதமான விஷயம். விவேகமானது வளரும்போது இறை சிந்தனையும் வளரும். இவ்வாறான ஒரு மனம் தீய சிந்தனைக்குட்படாது. எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் இறைவனின் எண்ணம் அந்த வேலைகளுக்கு நடுவில் வரத் தொடங்கும். அப்பொழுது அந்த இதயம் ஓர் அமைதியை அடையத்தொடங்கும். அத்துடன் தன்னையறியாமலே ஓர் ஆனந்தமும் ஏற்படும். இவ்வாறானவன் ஒருக்காலும் இவ்வுலகை விரும்பமாட்டான். அவன் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவனுடைய மனம் இறைவனில் வாழ்ந்து கொண்டிருக்கும்.

ஒருவன் முதலில் குருவின் போதனைகளுக்குக் கீழ்படிய வேண்டும். குருதான் ஒரு பக்தனை இறைவனுடன் சேர்த்து வைப்பவர். குருவிற்கு நாம் எவ்வளவுக்கெவ்வளவு கீழ்படிகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாக நம்மை இறைவனிடம் சேர்த்து வைப்பார். நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஆடைகள் அழுக்காகிறது. அழுக்கான ஆடைகளை அல்லது கறையான ஆடைகளை சோப்பு போட்டு நன்றாகக் கழுவுகிறோம். அதே போன்று உடலில் கறையோ அழுக்கோ ஆனால் உடலையும் சோப்பு போட்டு நன்கு கழுவிக்கொள்கிறோம். உடலில் ஏற்படும் துர்நாற்றத்தையும் அழுக்கினையும் சோப்பு போட்டு கழுவி சுத்தப்படுத்துவது போன்று நம் தீவினைகளால் விளைகின்ற கர்மாவாகின்ற அழுக்கினை துடைப்பது குருவேதான்.

குரு மூலமாகத்தான் நாம் இறைவனடி சேர முடியும். அதற்கு குருவிடம் கீழ்படிந்து அவருடைய போதனைகளை செம்மையாகப்புரிந்து பின்பற்ற வேண்டும். ஒரு மனிதனுக்கு குரு வந்தால் பின்னர் அவன் தீவினைகளைச் செய்யமாட்டான். குரு அவனுக்கு வழிகாட்டுவார். இறைவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடைய மனிதன் நல்லவை மட்டும்தான் எண்ணுவான், செய்வான். தீவினை செய்ய அவன் பயப்படுவான். ஒரு சிறு தீமையை ஒருவன் செய்தாலும் அதனுடைய விளைவு மிகப்பெரியதாக இருக்கும். பிறருக்கு துன்பங்களை விளைவிக்கின்றபோதுள்ள துணிவும் மகிழ்ச்சியும் தாம் அந்த வினையின் விளைவை அனுபவிக்கும்போது இருக்காது. அப்பொழுது மட்டும் வருத்தப்படுகிறார்கள். அனைவருக்குள்ளும் அனைத்துள்ளும் இறைவன் இருப்பதால்தான் யார் என்ன வினை செய்தாலும் அவை தமக்கே திரும்புகிறது. இறைவனை அடைய வேண்டும் என்ற வைராக்கியமுடைய இதயம் கொண்டவன் அவ்வழி செல்லமாட்டான். தவறி ஒருவன் செல்வதாக இருந்தால் அவனுக்குள் ஏதோ தீய குணம் (அகங்காரம்) இருக்கிறது என்பதை அறிய வேண்டும். அகங்காரத்தை உடைப்பதற்காக இறைவன் பக்தனை பல்வேறு வழிகளில் சோதிப்பான்.

இவ்வாறு ஒருவன் இறைவனால் சோதிக்கப்பட்டு இறுதியில் அவன் பரிசுத்தமடைகிறான். அது இறைவனை காலநேரம் அறிந்து அதாவது இறைவன் தமக்கு மனிதப்பிறவியை அருளியிருப்பது இறைவனைத் தேடுவதற்கும் அறிவதற்கும் அடைவதற்கும்தான் என்பதை அறிந்து இறைவனைத் தேட ஆரம்பிக்கிறான். இவ்வாறான ஒரு சூழ்நிலை ஒரு பக்தனுக்கு கிடைத்துவிட்டால் அவனுடைய மனம் எப்பொழுதும் இறைவா, இறைவா என்று இறைவனையே சுற்றிச்சுற்றி வரும். இப்படிப்பட்ட ஒரு பக்தன் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அவன் மனம், ஒரு சிறு குழந்தை தன் அன்புள்ள தாயை சுற்றிச் சுற்றி வருவது போன்று அன்பு இறைவனையே சுற்றிச்சுற்றி வரும்.

அதுமட்டுமின்றி எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை அந்த பக்தனுக்கு அவன் உணர்த்திக் கொண்டேயிருப்பான். நெருப்பு நெருப்புடன் ஒன்றாக இணைவது போன்று ஜீவாத்மாவாகின்ற சிறுநெருப்பு பரமாத்மாவாகின்ற பெரு நெருப்புடன் சேருவதற்காக இறைவன் செய்யும் செயல்கள்தான் மேலே கூறியவை.

எனவே இறைவனை தேடவேண்டிய நேரம்தான் இந்த மனிதப்பிறவி. இந்த நேரத்தில் அதாவது எப்பொழுது நமக்கு 'யோகதா' ஸ்தாபனத்தை ஏற்படுத்திய, இறைவனுடன் இணைந்தவரான குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் போதனைகளை பின்பற்றி இறைவனை உடனே தேடினால் கண்டு பிடிக்கலாம், உணரலாம், அடையலாம் என்பது உறுதி.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
பத்தும் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஸ்ரீ சுகப்பிரம்ம மகரிஷி





எஸ்.ரகுராமன்

பகவத் கீதையின் 10 ஆவது அத்யாயமான விபூதி யோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன், முனிவர்களில் நான் வியாசன் என்று கூறுகிறார். மஹா பாரதக் கதை எழுதிய வியாசரின் மகனே ஸ்ரீ சுகப் பிரம்மம். கிருதாசீ என்ற தேவமங்கையின் அழகில் மயங் கிய வியாசர், அவளிடம் மனதைப் பறி கொடுத்தார். அவரிடம் இருந்து தப்பிக்க கிளியாக மாறினாள். ஆனாலும் முனிவரின் தபோ பலத்தால் கர்ப்பம் தரித்தாள்.

ரிஷியின் கர்ப்பம் ஆனதால் உடனடியாக அவர் களுக்கு ஓர் மகன் பிறந்தான். குழந்தைக்கு முகம் கிளி போன்றும், உடல் மனிதனைப் போன்றும் இருந் தது. சுகா என்றால் கிளி. அதனால் கிளி முகம் கொண்ட அக்குழந்தைக்கு சுகர் என்று பெயரிட்டனர். பிறந்த உடனேயே இவருக்கு ஞானம் வந்து விட்டது.

எள் முனையளவு கூட களங்கமில்லாத மனதுடையவர் ஆக இருந்தார். ஸ்ரீ சுகரை தொடர்ந்து த்யானித்தாலே நமக்கு பரம ஞானம் சித்திக்கும். சதா சர்வ காலமும் ப்ரஹ்மத்திலேயே லயித்த ஒரே ரிஷி சர்வேஸ்வரனாகிய சிவபெருமானுக்கு பிறகு இவர் ஒருவர் மட்டுமே.

தந்தையை மிஞ்சிய தனயனாய் அபார ப்ரம்ம ஞானம் மிக்கவராய் விளங்கினர் ஸ்ரீ சுகப்பிரம்ம மகரிஷி. இவர் தேவ குருவான ப்ரஹஸ்பதியின் சிஷ்யர்.

இவரின் தந்தையான ஸ்ரீ வியாச பகவான் தனது மகனை அழைக்க, சுகர் வரும்பொழுது அவர் கூட மரம் செடி, கொடிகள் என்று சகல ஜீவராசிகளும் அனைத்தும் நடந்து வந்தன. ஏனென்றால் அனைத்திலும் அவர் பிரம்மத்தை கண்டார். இதனால் தனக்கு ஞானம் ஏற்பட்டதாக சற்று கர்வம் அடைந்தார். அவரது கர்வத்தை போக்க நினைத்த வியாச பகவான் உடனே மிதிலா புரி வேந்தனும் லோக மாதா சீதையின் தந்தையும் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் மாமனாருமான ஸ்ரீ ஜனக மகாராஜனிடம் ஞானம் பெற்று வா என்று அனுப்பி வைத்தார். ஜனகர் அவருடைய அகந்தையை சற்று அகற்றி அவருக்கு ஞானத்தை புகட்டினார். இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள் ஸ்ரீ ஜனகர் எப்படிப்பட்ட ஞானி என்று.

திருப்பதி ஸ்ரீ வெங்கடாசலபதியின் மாமனா ரான ஆகாசராஜனின் குலகுரு. பத்மாவதி (திருமலை ஸ்ரீ வேங்கடவனின் மனைவி) என்று ஆகாசராஜனின் குழந்தைக்கு தெய்வீக திருநாமம் சூட்டிய பெருமைக்குரியவர்.

பொதுவாக குரு பரம்பரை பின்வரு மாறு வரையறுக்கபட்டுள்ளது:

நமது குரு பரம்பரையில் சுகருக்கு சிறப்பான இடம் உண்டு. ஸ்ரீ சதாசிவன் ஸ்ரீமன் நாராயணன் சதுர் முக ப்ரஹ்மா வசிஷ்டர் சக்தி பராசரர் வ்யாஸர் சுக ப்ரஹ்மம் கௌட பாதர் கோவிந்தா பகவத் பாதர் ஸ்ரீ ஆதி சங்கராச்சார்யர் என்று வருகிறது.

தினமும் அதி காலையில் இந்த குரு பரம்பரையை நினைத்து வணங்கினால் சகல தேவதைகளை வணங்கிய பலன் கிடைக்கும்.

இறவா வரம் பெற்ற சிரஞ்சீவி மார்க்கண்டேயன் இவரது சீடன். இவரது மற்றொரு சீடர் கௌட பாதர். அவரது சீடர் கோவிந்த பகவத் பாதர். அவரது பிரதான சீடர் ஆதி சங்கரர்.

அர்ஜுனனின் பேரனும் அபிமன்யுவின் மகனு மான பரீக்ஷித்து, ஓர் முனிவரின் சாபத்தால் ஏழு நாட்களில் உயிர் போகும் என்பதறிந்து, அவனுக்கு சப்தமாகமாக (7 நாட்களும் க்ரம பாராயணம்) செய்வித்து ஸ்ரீ வைகுண்ட பிராப்தி அளித்த பொழுது அவருக்கு வயது 16 மட்டுமே. சப்த ரிஷிகளே எழுந்து நின்று மரியாதையை செலுத்தும் அளவிற்கு அபரோக்ஷ மகா மகா ஞானி. இன்று ஸ்ரீமத் பாகவத சப்தாக பாராயணம் என்ற முறைக்கு அன்றே வித்திட்ட ஒரே ரிஷி ஸ்ரீ சுக பிரம்மம்தான். இவர் ஒருவரால்தான் ஸ்ரீமன் நாராயணனின் அனந்த கல்யாண குணங்களையும், விசேஷங்களையும் மற்றும் லீலைகளையும் கூறும் ஸ்ரீமத் பாகவதம் என்னும் மகா காவியம் நமக்கு கிடைத்தது.

இந்து தர்மத்தை நிலைக்க செய்ததில் பெரும் பங்களித்த ஆதி சங்கரரின் குருவுக்கு குரு வானவர் சுகப்பிரம்ம ரிஷி.

**ஓம் வேதாத்மஹாய வித்மஹே**
**வியாச புத்ராய தீமஹி;**
**தந்நோ சுகர் ப்ரசோதயாத்!**

**சுகரூபாய வித்மஹே சுபீக்ஷ காரகாய தீமஹி**
**தன்னோ சுகப்பிரம்ம ப்ரசோதயாத்!**

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593



# விநாயகா போற்றி

பார்வதி குமாரா குஹசோதர
வினை தீர்க்கும் வினாயகா
வீதி தோறும் வீடு கொள்ளும்
முதன் முதற் கடவுள் விநாயகா.....................................1

மூன்று குட்டும் முக்கனியும்
கரும்புத் தேனும் அருகம் புல்லும்
தினமொரு கொழுக்கட்டையும்
விரும்பும் ஹரிஹரசுதன் தமையன்...............................2

ஔவைக்கருளிய தும்பிக்கைநாதன்
சோதரன் மணமுடிக்க முன்நின்றவன்
விசுகரன் யத யந்திரத்தைப்
பொடி பொடியாக்கியவன்
தாய்புரிந்த போரில் துணை நின்றவன்..........................3

முப்புரிநூலும் தும்பைப் பூவும் எருக்க மாலையும்
எளிமையாய் மகிழ்வுடன் அணிந்து
அபயக்கரத்துடன் என்றும் உறைபவன்
திரிபுரம் வென்ற பரமசிவன் தனயன்............................4

கருட வாகனன் மருமகன் கணநாதன்
அரசமரத்தடி கொலுவிருக்கும்
உலகையாளும் பேரரசன்
தித்திக்கும் திகட்ட பேரரகன் கஜேந்திரன்
மாம்பழம் வென்று மகிழ்ந்த மூக்ஷிக வாகனன்...........5

எண்ணிலடங்க வரம் அருளி
வினை அகற்றிய ஞான ஒளி
கஜானனா கரிமுகா ஏகதந்தா
வக்ரதுண்டா உன் பாதம் பணிந்தேன்..........................6

மங்களா தத்தராஜன்
துபாய்,
+971 50 159 7882



## விநாயகர் சிலைகளை ஆற்றில் கரைக்கும் காரணம்

ஆடிப்பெருக்கில் வெள்ளம் வந்து ஆற்றில் உள்ள மணல்களை கரைத்துக் கொண்டு போய் இருக்கும், அதனால் அங்கே நீர் நிலத்தில் இறங்காமல் ஓடிக் கடலை அடையும். ஆனால் களிமண் உள்ள இடத்தில் நீர் கீழே பூமியில் இறங்கும். அதனால் விநாயகர் சதுர்த்தி அன்று சிலைகளை களிமண்ணால் செய்து ஆற்றில் கரைக்கச் செய்தார்கள்.

ஈரக்களிமண் சீக்கிரம் கரைந்து நீரின் வேகத்தோடு சென்று விடும். சற்று காய்ந்த களிமண் அதே இடத்தில் படிந்து விடும். இதனால் ஆற்றில் வரும் நீரானது பூமியில் நிலத்தடி நீராக மாறி நமக்கான குடிநீர் பிரச்சனையைத் தீர்க்கும் என்பதற்காக விநாயகரை நீர்நிலைகளில் கரைக்கும் வழக்கம் ஏற்பட்டது.





எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# எவ்வுயிர்களின் மனமும் புண்படாமல் பார்த்துக் கொள்

எவ்வுயிர்களின் மனமும் புண்படாமல் பார்த்துக் கொள். பிறருக்கு மட்டும் இது உபதேசமல்ல. உனக்கும் இது ஒரு உபதேசமே.

❖❖❖

உலகம் மனிதர்கள் அனைவரையும் ஏற்கும். உலகில் வெற்றி தோல்வி களை மனிதர்களே ஏற்க வேண்டும்.

❖❖❖

என்றென்றும் வெற்றியை மட்டுமே உலகம் ஏற்கும்.

❖❖❖

பந்தயத்தில் ஓடும் குதிரை கொள்ளை(உணவை) ஏற்கும். பந்தயத்தில் ஓடினாலும் பந்தயத்தை ஏற்காது. அதுபோல் ஆண்டவன் பக்தனின் பூஜைகளை ஏற்பான்.

❖❖❖



கடவுள் நம்பிக்கையை மனிதனே ஏற்க வேண்டும். கடவுள் ஏற்க மாட்டான்.

❖❖❖

பட்டுப் பூச்சியின் எச்சிலான பட்டு நூலுக்கே விலை அதிகம். அதுபோன்று ஆண்டவனின் விபூதி, துளசிப் பிரசாதங்களுக்கு மிகச் சிறப்புண்டு. காரணம்.. அவைகளே அருளாகின்றன.

❖❖❖

கடவுளை வைத்துப் பார்த்தாலும், புத்தியை வைத்துப் பார்த்தாலும் உலகில் உண்மை ஒன்றாகவே தெரியும். இதனால் மாயை என்பதே இல்லை.

❖❖❖

மாயை என்பதே மாயை. இதுவே என் எண்ணம்.

❖❖❖

ஆண்டவனை ஆதரிக்கிறேன் என்று சொல்லாதே. அதை அவன் ஏற்பதில்லை.

❖❖❖

ஆண்டவனை பக்தி செய்கிறேன் என்று சொல். இதையே ஆண்டவன் ஏற்கிறான்.

❖❖❖

புத்தி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கும். அது கல்வி கற்றால் தான் வளரும்; உயரும். இல்லையேல், அது பிறந்த மேனியில் அப்படியே இருக்கும். இந்த வண்ணம் இருக்காதீர்கள்.

❖❖❖

மனிதன் உயருவதற்கு நிறம் மாறுவான். ஓணான் மட்டும் நிறம் மாறாது; தவளையும் நிறம் மாறும்.

❖❖❖

நிலவொளியில் மறுநாள் வரும் சூரியனை நம்பி செடிகள் வளருகின் றன. அதுபோல் கடவுள் காட்சி தரமாட்டான் என்று எண்ணமே வேண்டாம்.

❖❖❖

அனைவருக்கும் கடவுளின் அருளும், பக்தியும் நிச்சயம் உண்டு.

❖❖❖

வைக்கோல் போர் முழுவதும், “நாயே இது உனக்கு உணவு” என்று சொன்னாலும் நாய் மகிழ்ச்சி அடையாது. இதேபோல் உலகமே கிடைத்தாலும், பக்தனுக்கு கடவுளே சந்தோஷம் ஆகும்.

❖❖❖

கல்வி, மனிதனிடம் தோன்றுகின்ற ஒரு அற்புதக் காற்று. உலகம், பொரி கடலை. உன்னிடம் அற்புதமிருந்தால் உலகையே ஊதித் தள்ளலாம்.

❖❖❖

கப்பல்..மீனைக் கேலி செய்ய முடியுமா? முடியாது. அது போல உலக வாழ்வு, கடவுளை மிஞ்சவே முடியாது.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

# சாமி மூட்டை

## நரிக்குறவர்களின் விசித்திரமான பக்தி

குழந்தை பிறந்தவுடன் அதற்கு பெயர் சூட்டி அழைத்து பார்ப்பதில் தனி சந்தோசம் இருக்கிறது அதுவும் முதல் குழந்தைக்கு பெயர் சூட்டுகிற வைபவம் இருக்கிறதே அதற்கான எத்தனிப்பே அலாதியானது சிலர் குழந்தை கருவில் உருவாக துவங்கியவுடனேயே பெயர் வைப்பதை பற்றி சிந்திக்க ஆரம்பித்து விடுகிறார்கள் இன்ன பெயர் தான் வைக்க வேண்டுமென்று கணவனும் அது கூடாது இன்னமாதிரிதான் பெயர் வைக்க வேண்டுமென்று மனைவியும் போட்டி போட்டு கொள்வது தனியான சுவை. சில வேளைகளில் இந்த போட்டியே முற்றி சண்டை சச்சரவுகளில் போய் முடிந்து உறவினர்கள் வந்து பஞ்சாயத்து பேச வேண்டிய நிலையம் ஏற்பட்டு விடுகிறது.

மனைவிக்கு ஆசை தனக்கு பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருந்தால் அதற்கு தனது தகப்பன் பெயரை வைக்க வேண்டும் மீசை முறுக்கி வேஷ்டியை இழுத்து கட்டி அவர் கம்பீரமாக நடப்பது போல் தனது மகனும் நடப்பான் அவர் நாலு பேருக்கு நியாயம் கூறுவது போல தன் மகனும் செய்வான் என்று அவள் கற்பனை செய்து கணவனிடம் தெரிவிப்பாள்.

அவள் சொன்னாளோ இல்லையோ கணவனின் கோபம் தலை மீது ஏறிவிடும். உன் அப்பன் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாதவன் கல்யாணம் முடிந்து மறுவீட்டுக்கு போகும் போது மயில் கண் போட்ட வேஷ்டி வாங்கி தருவதாக வலிய வந்து வாக்குறுதி கொடுத்தார் அரைமுழதுண்டு கூட வாங்கி கொடுக்காமல் அனுப்பி விட்டான் அப்படி பட்ட மோசக்காரன் பெயரையா என் மகனுக்கு வைக்க வேண்டும்? என் அப்பாவின் பெயரை தான் வைக்க வேண்டும் என்று கத்துவான்.

வேறொரு கணவனுக்கு இன்னொரு ஆசை தனக்கு பிறப்பது பெண் குழந்தையாக இருந்தால் மீசை முளைத்த பருவத்தில் எதிர்த்த வீட்டு மாடியில் நின்று முத்துப்பல் தெரிய சிரித்து விரல் ஜாடையில் ஆயிரம் கதை சொல்லிய தன் முதல் காதலியின் நினைவாகவும் பத்து பைசாவுக்கு துப்பு இல்லாத அந்த பய மகளோடு ஊர் சுற்றினால் கை காலை உடைத்து போடுவேன் என்று மிரட்டி தன் காதலுக்கு அப்பா கட்டிய சமாதியின் நினைவாகவும் மனதை விட்டு எவ்வளவு தான் சோப்பு போட்டு அழித்தாலும் போகவே போகாத இளம் பருவத்து காதலியின் நினைவாக அவளின் பெயரை சூட்டுவதற்கு ஆசை.

ஆனால் என்ன செய்வது? தான் காதலித்ததும் தனது அப்பாவின் உதைகளுக்கு பயந்து காதலை மனதிற்குள்ளையே குழி தோண்டி புதைத்தும் தனது மனைவிக்கு நன்றாக தெரியும். இந்த லட்சணத்தில் காதலியின் பெயரை குழந்தைக்கு வைத்தால் அடுத்த வேளை சோறு போட மாட்டாள்.

வீட்டுக்கு வெளியே நிற்கவைத்து விளக்குமாற்றால் பூஜை செய்தாலும் செய்துவிடுவாள். என்ற பயத்தில் மௌன சாமியாராக போவோர்கள் எத்தனையோ உண்டு. ஒவ்வொரு குழந்தைக்கு பெயர் வைப்பதிலேயும் பெற்றோர்களின் இனிமையான நினைவுகள் ஆழமாக பதிந்து கிடக்கும்.

மற்ற நாடுகளில் எப்படியோ எனக்கு தெரியாது நமது நாட்டில் குழந்தைகளுக்கு பெயர் வைப்பதில் கூட ஆன்மீக சிந்தனை மலிந்து கிடக்கிறது மகனுக்கோ மகளுக்கோ இறைவனின் பெயரை வைப்பதனால் நம்மை அறியாமலையே தினசரி பலமுறை இறை நாமாக்களை பாராயணம் செய்கிறோம். கடவுளை பற்றி நினைப்பே இல்லாதவன் கூட சாகும் தருவாயில் சங்கரா என்று மகனை அழைத்தால் கூட அது சிவபெருமானின் நினைவோடு அவன் இறந்ததாக கொள்ள வேண்டுமென்று பெரியவர்கள் சொல்வார்கள்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

நம்மை போன்றவர்கள் குழந்தைகளுக்கு பெயர்களை இப்படிதான் இடுகிறோம் ஆனால் நம்மிடமே வாழுகின்ற நரிகுறவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பெயர் வைப்பதில் முற்றிலும் மாறுபட்ட ஒரு சிந்தனை போக்கு உடையவர்களாக இருக்கிறார்கள். தற்காலத்தில் சினிமா நடிகர்களின் மேல் அவர்கள் வைத்திருக்கின்ற ஈடுபாட்டால் நட்சத்திரங்களின் பெயர்களை குழந்தைகளுக்கு சூட்டினாலும் கூட பல நரிகுறவர்கள் தங்களது பரம்பரை வழக்கத்தை இன்னும் விட்டுவிடவில்லை.

ஆற்காட்டான், விக்கிரவாண்டியான், நாமக்கல்லான், மெட்ராஸ் என்ற பெயர்கள் நரிகுறவர்கள் மத்தியில் மிக பிரபலமானது ஒரு நரிக்குறவர் கூட்டத்தில் இத்தகைய பெயர் பத்தில் ஐந்து பேருக்காவது கண்டிப்பாக இருக்கும். இந்த பெயர்கள் எதை சுட்டுகிறது என்றால் அவர்கள் தங்கள் தொழில் நிமித்தமாக பல ஊருக்கு சுற்றி அலையும் போது எந்த ஊரில் குழந்தை பிறக்கிறதோ அந்த ஊரின் பெயரையே குழந்தையின் பெயராக வைத்து விடுவார்கள்.

இப்படி பெயர் வைப்பதிலும் விந்தையான போக்கை கொண்ட நரிகுறவ மக்கள் இறைவழிபாடு செய்வதிலும் பல புதுமைகளை வைத்திருக்கிறார்கள் பொதுவாக நாம் தெய்வங்களை ஆலயங்கள் அமைத்தோ அல்லது ஒரு பொது இடத்தில் வைத்தோ வழிபடுவோம். ஆனால் நரிகுறவர்கள் தங்கள் கூடாரங்கலையே வழிபாடும் இடங்களாக வைத்திருக்கிறார்கள். ஒவ்வவொரு நரிகுறவ கூடாரத்திலும் வழிபாட்டுக்குறிய பொருள்கள் கண்டிப்பாக இருக்கும் தங்களது தெய்வங்களை வைத்திருக்கும் பெட்டியை சாமி மூட்டை என்று நரிகுறவர்கள் அழைப்பார்கள் இந்த சாமி மூட்டை இல்லாத குடும்பங்களே அவர்கள் மத்தியில் இல்லை என்று சொல்லலாம்.

அவர்கள் சாமி பார்ப்பதற்கு எளிமையாகவும் அழகாகவும்






இருப்பார்கள் வெள்ளியில் செய்யப்பட்ட பெண் தெய்வ உருவம் பத்து செ.மீ உயரத்தில் இருக்கும் அந்த உருவத்திற்கு நான்கு கைகள் இருக்கும் வழக்கமான சாமி உருவங்கள் அபயம், ஹஸ்தம் காட்டும் பாங்கிலேயே கைகள் அமைந்திருப்பதை கண்டிருக்கிறோம் ஆனால் இந்த சுவாமி உருவம் அப்படி இல்லாமல் தொங்கும் பாணி யிலேயே அமைந்திருக்கும் முழங்கால் வரையில் உள்ள பாவாடையும் வளையல்களும் கைபட்டைகளும் கொண்ட அந்த பெண் வடிவம் பெரிய வயிறு உடையதாக அமைந்திருக்கும் இந்த உருவம் முக்கோண வடிவிலான துணியால் அமைந்த மெத்தையின் மேல் வைக்க பட்டிருக்கும் இதை மற்றவர்கள் கண்களில் படாதவாறு மூட்டை கட்டி வைத்திருப்பார்கள்.

ஆடிமாதம் பங்குனி மாதம் போன்ற நாட்களில் சில நேரம் மட்டும் பூஜைகள் நடத்தினாலும் புரட்டாசி மாதத்தில் மட்டுமே பரவலான நரிகுறவர்கள் சாமி கும்பிடும் சடங்கை நடத்துகிறார்கள். புரட்டாசி மாதத்தில் முதல் வெள்ளி கிழமை அன்று விரதம் துவங்கி கடைசி வெள்ளி கிழமை வரை விரதம் இருந்து பூஜைக்கு தங்களை ஆயத்தபடுத்தி கொள்கிறார்கள். மூட்டையில் கட்டி வைக்க பட்டிருக்கும் சாமியை வெளியில் எடுத்து கூடாரத்தில் நடுவில் வைத்து மஞ்சள் குங்குமம் மலர்களை சாற்றி தினசரி பூஜை செய்து கடைசி வெள்ளி அன்று இரவு முழுவதும் ஆடிபாடி ஒரு பைநிறைய பச்சை அரிசியும் பனிரெண்டு தேங்காயும் படையலிட்டு அரிசி மாவோடு பனைவெல்லம் கலந்து நெய்யோடு பிசைந்து ரொட்டி செய்து எண்ணெயில் பொரித்தெடுப்பார்கள்

சாராயம் அல்லது பிராந்தி சுவாமிக்கு படைக்கப்பட்டு ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவரும் மதுவருந்தி தன்னை மறந்த நிலையில் வெறிக்கூச்சல் போட்டு நடனமாடுவார்கள் அந்த நிலையில் நம்மை போன்ற மனிதர்களை அவர்கள் தனது கூட்டத்திற்குள் அனுமதிப்பது கிடையாது தப்பி தவறி யாரவது தெரியாமல் மாட்டி கொண்டால் கொடுக்கின்ற உதையை வாங்க முடியாது. நடனம் எல்லாம் முடிந்த பிறகே சுவாமிக்கு எருமை மாடு அல்லது ஆடு பலி கொடுக்கிறார்கள். பலிகொடுக்கப்பட்ட மிருகத்தின் இரத்தத்தை சுவாமியின் மேலேயே தெளித்த பிறகு கூட்டத்தில் உள்ள அனைத்து ஆண்களும் பச்சை இரத்தத்தை குடிக்கிறார்கள். பெண்கள் இந்த இரத்தம் குடிக்கும் சடங்கில் கலந்து கொள்ள கூடாது பலிகொடுத்த விலங்கின் மாமிசத்தை சமைத்து புசிப்பதற்கு மட்டுமே அவர்களுக்கு அனுமதி உண்டு.

இத்தகைய வழிபாடு தவிர எழுபானை பூஜை என்ற ஒரு இரகசியமான வழிபாட்டு முறையும் நரிக்குறவர் மத்தியில் இருக்கிறது இதில் அவர்கள் தப்பி தவறி கூட மற்ற இனத்து மக்களை அனுமதிப்பது இல்லை அறுவடை காலம் முடிந்த தை மாதத்தில் ஊருக்கு வெளியே அடர்ந்த காடுகளில் இந்த வழிபாட்டை அவர்கள் நடத்துகிறார்கள் மூன்று கற்களால் அடுப்பு அமைத்து ஒன்றைவிட ஒன்று சிறியதான ஏழு பானைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி அடுப்பு மூட்டுகிறார்கள் ஏழாவதாக மேலிருக்கும் பானையில் பச்சரிசி போட்டு பொங்கல் வைக்கிறார்கள் சாதம் பொங்கி வரும் போது வெறும் கைகளால் சாமி ஆடுகிறவர் பொங்கலை கிளருவாராம்.

ஏழாவது பானையில் பொங்கல் முடிந்தவுடன் ஆறாவது பானையில் பொங்கல் செய்வார்களாம் இப்படி ஏழு பானைகளிலும் பொங்கல் செய்து அதன் பிறகு அதனோடு பனைவெல்லம் கலந்து சாமிக்கு படைத்து அனைவரும் உண்பார்களாம். இந்த பூஜையில் மற்ற இனத்தவர்களுக்கு அனுமதி இல்லை என்பதோடு அவர்கள் இனத்து பெண்கள் சிறுவர் சிறுமிகளுக்கு கூட அனுமதி கொடுப்பது இல்லை =. அதற்கு காரணம் அந்த பொங்கல் நடத்துகிற போது காளி மாதாவே நேராக அங்கு வருவாளாம் அவளது வருகை பெண்களுக்கு குழந்தைகளுக்கு கிலியை கொடுத்துவிடுமாம் இதன் அடிப்படை தத்துவம் என்னவென்றால் அச்சபடுபவன் ஆண்டவனை தரிசிக்க முடியாது என்பதாகும்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# ஆன்ம விழிப்பு அடைய
## அகங்காரத்தை விரட்டுங்கள்

நீங்கள் எங்கே போனாலும் நான் எனும் அகங்காரம் உங்களுடன் இருந்தால், நீங்கள் என்ன செய்தாலும் அது ஒரு குற்றமாகத் தான் இருக்கப் போகிறது.

என்னைப் பொருத்த வரை அகங்காரம் என்பது ஒரு குற்றவாளி.

கவன ஈர்ப்பு வேண்டும் என்று கேட்காதீர்கள்.

யாரும் உங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத படி வாழுங்கள்.

நீங்கள் ஒருபோதும் இந்த உலகத்தில் இல்லை என்பது போல் வாழுங்கள்.

உங்கள் அசைவுகள் யாரும் கேட்காத படியும் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், என்று கூட உணராத படியும் நகருங்கள்.

அதன் பிறகு மட்டுமே ஆன்மப் பெரு வெடிப்பை உங்களால் உணர முடியும்.

இல்லையெனில் எப்போதும் ஆன்மாவை உணர தடையாக பாறையாக அகங்காரம் உங்களுக்குள் தடுப்பு போல் இருந்து கொண்டே இருக்கும்.

அது உங்களை ஆன்மாவை உணர விடாது.

ஏன் கவன ஈர்ப்பைக் கேட்கிறீர்கள் ?

ஏனென்றால், உங்களுக்கு உங்களைப் பற்றி நீங்கள் யார் என்கிற உறுதி இல்லை.

ஆனால் இந்த கவன ஈர்த்தலின் மூலம் நீங்கள் யார் என்பதை எவ்வாறு தெரிந்து கொள்ள போகிறீர்களா?



கண்ணாடியை பார்ப்பதன் மூலம் நீங்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது.

மற்றவர்களின் கண்களைப் பார்ப்பதன் மூலமாகவும் நீங்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது.

அவர்கள் உங்களைப் பாராட்டினாலும் சரி குறை சொன்னாலும் சரி.

அவர்களின் கண்கள் கண்ணாடியை விட ஒன்றும் அதிகமாக இல்லை.

நண்பர்கள் எதிரிகள் எல்லோருமே கண்ணாடிகள் தான்.

நீங்கள் உங்களைப் பற்றி நேரடியாக தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு நீங்கள் உட்புறமாக செல்ல வேண்டும்.

– ஓஷோ

# இயற்கை பேரழிவை எதிர்கொள்ள

புயல், நிலச்சரிவு, பூகம்பம், வெள்ளம், மூன்றாம் உலகப் போர் போன்ற பேரழிவு எந்த நேரத்திலும் எழலாம். அத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வது? இதைப் பற்றி எந்த ஞானமும் இல்லாததால், சாதாரண மனிதர்கள் குழப்பமடைந்து மனதின் சமநிலையை இழக்கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் தவறான செயல்களைச் செய்யலாம் அல்லது தவறான முடிவுகளை எடுக்கலாம்.

இத்தகைய சூழ்நிலைகளை தைரியமாக எதிர்த்துப் போராடுவதற்கு ஆன்மீக நடைமுறையின் ஒரு பகுதியாக நாமஜபம் மேற்கொள்வது அவசியம், இதனால் ஆன்மீக வலிமையை நம்முள்ளே உருவாக்கி, சூழ்நிலையை தைரியமாக எதிர்கொள்ள முடியும்.

பாதகமான காலங்களில் கூடஆன்மீக பயிற்சியில் எவ்வாறு முயற்சிகள் எடுப்பது என்பதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### 1. பிரார்த்தனை

பகவான் ஸ்ரீகிருஷ்ணர், கிராம தேவதை, வாஸ்து தேவதை மற்றும் ஸ்தான தேவதை ஆகியவற்றை ஒவ்வொரு 15 நிமிடங்களிலிருந்து அரை மணி நேரத்திற்கு ‘கடவுளே (தெய்வத்தின் பெயர்) நான் உங்களிடம் சரணடைகிறேன் என்று முழு மனதுடன் ஜபிக்கவும். இந்த பேரழிவிலிருந்து நீங்கள் மட்டுமே எங்களை மீட்க முடியும். உங்கள் நாமத்தை நான் தொடர்ந்து உச்சரிக்க வேண்டும். என்னை, என் குடும்பத்தை மற்றும் எனது வீட்டைச் சுற்றி உங்கள் நாமத்தின் கவசம் உருவாக்கப்படட்டும்.’

### 2. நாமஜபத்தை அதிகரித்தல்

நாள்முழுவதும் முடிந்தவரை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அல்லது உங்கள் இஷ்ட தெய்வத்தின் நாமத்தை ஜபம் செய்யவும். கலியுகத்தில் இறைவனின் நாமம் மட்டுமே நமக்குத் துணை, மனதில் ஜபம் செய்து கொண்டே இருங்கள். கைப்பேசி அல்லது ஒலி பெட்டியில் ஜபத்தை ஒலிக்க விடும்போது அதை கேட்பதன் மூலம் ஜபம் செய்ய வேண்டும் என்று ஞாபகம் ஏற்படும்.

### 3. பிறருக்கு உதவி செய்யும்போது எத்தகைய ஆன்மீக உணர்வு நம்மிடம் இருக்க வேண்டும் ?

இந்த பாதகமான காலகட்டத்தில் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் மற்றும் மன தைரியத்தை அளிப்பதன் மூலம் கடவுள் மீதான நம்பிக்கையை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். சமூக சகோதரத்துவத்தைப் பேணுவது ஒவ்வொருவரின் மதக் கடமையாக இருந்தாலும், இன்னொருவருக்கு உதவும்போது ‘நான் உதவி செய்யவில்லை, கடவுளே இதை என் மூலம் செய்து வருகிறார்’ என்ற உணர்வு இருக்க வேண்டும். இது, ‘நான் செய்கிறேன்’ என்ற எண்ணத்தைத் தடுக்கும், மேலும் அந்த நபருடன் கொடுக்கல்வாங்கல் கணக்கும் உருவாகாது.

### 4. ஆளுமை குறைகளின் தீவிரத்தை மற்றும் அகம்பாவத்தின் வெளிப்பாட்டைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்வது

இத்தகைய சூழ்நிலைகளில் மனதில் கலக்கம், பதட்டம், அச்சம் மற்றும் அதனால் அமை தியின்மை போன்ற ஆளுமை குறைபாடுகள் வெளிப்படுவ தற்கான வாய்ப்புகள் உள்ளன. சரியான சுய ஆலோசனைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இத்தகைய சூழ்நிலையில் இருந்து வெளியேறலாம்.

4அ. பின்வரும் சுய ஆலோசனையை எடுப்ப தன் மூலம் பதட்டத்தை வெற்றி கொள்ளவும் (அ2 உத்தி)

சம்பவம்: அதிக மழை பெய்ததால் நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது

சுய ஆலோசனை: நகரத்தின் நிலைமையைக் கவனிக்கும்போது, ‘எனக்கும் எனது குடும்பத்திற்கும் என்ன நேரிடும்’ என்ற ஒரு எண்ணம் என் மனதில் ஏற்படும்போது, நான் நிகழ்காலத்தில் வாழ்ந்தால்தான் நிலைமையை எதிர்கொள்ள முடியும், கடவுளும் அதைதான் விரும்புவார் என்பதை நான் உணர்வேன். நான் வீட்டிலுள்ள பொருட்களை தண்ணீரில் மூழ்காமல் பாதுகாப்பாக வைப்பேன், அச்சமயத்தில் எனது குடும்பத்திற்கு உதவுவதுதான் எனது கடமை / ஆன்மீக பயிற்சி என்பதை உணர்வேன். கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள நான் கற்றுக்கொண்ட விஷயங்களை நினைவுகூர்ந்து பொருத்தமான செயல்களை நாமஜபத்துடன் செய்வேன்.

4ஆ. பயம் ஏற்பட்டால் சம்பவத்தை ஒத்திகை பாருங்கள் (அ3 உத்தி)

ஒரு சூழ்நிலையை எதிர்கொள்ளும் பயம் உங்களுக்கு இருக்கும்போது, அ3 உத்தியின்படி ஒரு சுய ஆலோசனையை எடுத்துக் கொள்ளுங்கள்.

இதற்கு உதாரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம்: தொலைக்காட்சியில் பல நகரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட செய்தியைப் பார்த்தேன். அதன்பிறகு, ‘அண்டை நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு எங்கள் வீடுகளை காலி செய்யச் சொன்னால், நான் வேறு இடத்திற்கு செல்ல முடியுமா?’ என்று நான் யோசிக்க ஆரம்பித்தேன். இத்தகைய எண்ணத்தால் என் மனம் பயத்தில் நிரம்பியது.

அ. அருகிலுள்ள நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் இந்த இடத்தை காலி செய்யுமாறு நகராட்சி ஊழியர்கள் எங்களிடம் சொன்னார்கள்.

ஆ. இந்த சூழ்நிலையிலிருந்து என்னைப் பாதுகாப்பாக வெளியேற்றும்படி கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

இ. அடிப்படை தேவைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறேன்.

ஈ. பேரழிவு நிர்வாகத்தின் சில நிபுணர்கள் எங்களுடன் வருகிறார்கள். நான் அவர்களின் உதவியுடன் வெள்ள நீரில் நடந்து கொண்டிருக்கிறேன். வெள்ளம் அதிகமாக உள்ள இடங்களில் நான் எச்சரிக்கையுடன் என் வழியைத் தெரிந்து கொண்டு முன்னேறுகிறேன். நான் தொடர்ந்து பிரார்த்தனை மற்றும் நாமஜபம் செய்கிறேன்.

உ. நான் எங்கு சிக்கலை எதிர்கொண்டாலும், உதவியாளர்களின் உதவியுடன், கடவுளின் அருளை நான் அனுபவிக்கிறேன். எனவே என் மனம் ஸ்திரமாக இருப்பதோடு கடவுள் மீது என் நம்பிக்கையும் வளர்ந்து வருகிறது.

ஊ. கடவுளின் அருளால் நான் ஒரு பாதுகாப்பான இடத்தை அடைகிறேன்.

எ. கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் என்னுடன் கொண்டு வந்த அனைத்தையும் ஒழுங்குபடுத்தி வைக்கிறேன். சுய ஆலோசனைகள் எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றிய கூடுதல் விவரங்களுக்கு ஸனாதன் ஸன்ஸ்தாவின் புனித உரை ‘ஆளுமை குறைபாடு நீக்குதல் பற்றிய செயல்முறை (பகுதி 2)’ ஐப் பார்க்கவும்.

பிரஹ்லாதனை போல் இறைவன் மீது தீவிர பக்தியை வளர்க்க முயற்சி செய்யுங்கள்

கடவுள் மீதான நம்பிக்கை எந்தவொரு பேராபத்தையும் கடந்து செல்ல உதவுகிறது. பக்த பிரஹ்லாதனின் உதாரணம் அனைவரும் அறிந்ததே. பயங்கர பேராபத்துக்களை எதிர்கொள்ள நேர்ந்த போதிலும், கடவுள் மீது பிரஹ்லாதனின் நம்பிக்கை சிறிதும் அசையவில்லை. ஒவ்வொரு முறையும் அவன் கடவுளை ‘நாராயணா’ என்று அழைத்தான். அவனது அபயக்குரலைக் கேட்ட கடவுள் நரசிம்ம (மனிதசிங்க வடிவம்) வடிவத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.

கடவுள் மீதான நம்பிக்கை எவ்வளவு ஆழமாகவும் தீவிரமாகவும் இருக்க வேண்டும் என்பதை இந்த எடுத்துக்காட்டு விளக்குகிறது. ஆன்மீக பயிற்சி இல்லாமல் இந்த உயர்ந்த ஆன்மீக நிலையை அடைவதற்கு மாற்று வழி இல்லை. கடவுள் மீது இத்தகைய ஆழ்ந்த நம்பிக்கையை வளர்ப்பதற்கான முதல் படி தொடர்ந்து ஆன்மீக பயிற்சி செய்வதே. பிரஹ்லாதனை போன்ற நம்பிக்கையை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் அனைவரும் கடவுளின் அகண்ட கிருபையை அனுபவிக்க முடியும்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626




ஆன்மிகமலர் மெயில் புக் 16-30 செப்டம்பர் 2020 33
www.aanmeegamalar.com

# பீமரூபி ஸ்துதி

சமர்த்த ராமதாசர் வரலாறு (பாகம்-6)

பீமரூபி ஸ்துதி

இந்த ஸ்தோத்திரத்தை த்ரயோதஸாக்ஷரியுடன் பாராயணம் மிகவும் நன்று. இந்த ஸ்தோத்திரத்தை தினமும், ஸ்ரீ ஆஞ்சநேயரை மனதில் நினைத்து பாராயணம் செய்து வந்தால் நிச்சயமாக நினைத்தது கை கூடும் என்று நம்பிக்கை. இருபத்தி ஓர் முறை இருபத்தோர் நாட்களுக்கோ அல்லது ஒரு மண்டலமோ செய்யலாம். முடிந்த பொது, வடை மாலை, ஸுன்டல் அல்லது தயிர் ஸாதம் நைவேதியம் சைவது நன்று.

**பீமரூபீ ஸ்தோத்ர**

பீமரூபீ மஹாருத்ரா வஜ்ர ஹனுமான
மாருதீ|
வனாரி அன்ஜனீஸூதா ராமதூதா
ப்ரபஞ்ஜநா ||-1||

மஹாபலீ ப்ராணதாதா ஸகளாம் உடவீ
பளேம்|
ஸௌக்யகாரீ து:கஹாரீ தூர்த வைஷ்ணவ
காயகா ||2||

தீனநாதா ஹரீரூபா ஸுந்தரா ஜகதந்தரா|
பாதாள தேவதாஹந்தா பவ்யஸிந்தூர
லேபநா ||3||

லோகநாதா ஜகன்னாதா ப்ராணநாதா
புராதனா|
புண்யவந்தா புண்யஸீலா பாவனா
பரிதோஷகா ||4||

த்வஜாங்கேம் உசலீ பாஹோ ஆவேஸேம்
லோடலா புடேம் |
காலாக்னி காலருத்ராக்னி தேகதாம் காம்பதீ
பயேம் ||5||

ப்ரஹ்மாண்டே மாயிலீ நேணோம் ஆவளே
தந்த பங்கதீ |
நேத்ராக்னி சாலில்யா ஜ்வாலா ப்ருகுடீ
தாடில்யா பளேம் ||6||

புச்ச தேம் முரடிலே மாதா
கிரீடீ குண்டலே பரீ |
ஸுவர்ண கடி காஞ்ஸோடீ கண்டா
கிங்கிணி நாகரா ||7||

டகாரே பர்வதா ஐஸா நேடகா ஸட
பாதளூ |
சபளாங்க பாஹதாம் மோடேம்
மஹாவித்யுல்லதேபரீ ||8||

கோடீச்யா கோடி உட்டாணேம் ஜேபாவே
உத்தரேகடே |
மந்தாத்ரீ ஸாரிகா த்ரோணுாக்ரோதேம்
உத்பாடிலா பளேம் ||9||

ஆணிலா மாருதி நேலா ஆலா கேலா
மனோகதீ |
மனாஸீ டாகிலேம் மாகேம் கதீஸீ தூளணா
நஸே ||10||

அணூபாஸோனி ப்ரஹ்மாண்டா எவடா
ஹோத ஜாதஸே |
தயாஸீ துளணா கோடேம் மேருமந்தார
தாகுடே ||11||

ப்ரஹ்மாண்டாபோவதே வேடே வஜ்ரபுச்சேம்
காலும் ஸகே |
தயாஸீ துளணா கைஞ்சீ
ப்ரஹ்மாண்டீம் பாஹதாம் நஸே ||12||

ஆரக்த தேகிலேம் டோளாம்
க்ராஸிலேம் ஸூர்யமண்டலா |
வாடதாம் வாடதாம் வாடே பேதிலேம்
ஸூன்யமண்டலா ||13||

தனதான்ய பஸுவ்ருத்தி புத்ரபௌத்ர
ஸமக்ரஹீ |
பாவதீ ரூபவித்யாதி ஸ்தோத்ரபாடேம்
கரூனியாம் ||14||



எஸ்.ரகுராமன்

பூதப்ரேதஸமந்தாதி ரோகவ்யாதி ஸமஸ்தஹீ
|
நாஸதீ தூடதீ சிந்தா ஆநந்தே பீமதர்ஸனே
||15||

ஹே தரா பந்தரா ஸ்லோகீ லாபலீ ஸோபலீ
பலீ |
த்ருட தேஹோ நி:ஸந்தேஹோ ஸங்க்யா
சந்த்ரகலாகுணே ||16||

ராமதாஸீ அக்ரகணு கபிகுலாஸி
மண்டணு|
ராமரூபீ அந்தராத்மா தர்ஸனே தோஷ
நாஸதீ ||17||

|| இதி ஸ்ரீ ராமதாஸக்ருதம் ஸங்கட
நிரஸனம் நாம
ஸ்ரீ மாருதி ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்||

1. மஹத்தான ரூபத்தையுடையவரே, மஹாருத்ராம்சமான வைரம் பாய்ந்த சரீரத்தோடு கூடின ஹனுமந்தா, வனத்தில் சஞ்சரிப்பவரே, அஞ்சனா தேவியின் புத்ரரும் வாயு அம்சமுமான ராமதூதா.
2. மஹாபலமுடையவரே, ப்ராணனைக் கொடுப்பவரே, அனைவரின் உற்சாகத்தைத் தூண்டும் சக்தி வாய்ந்தவரே, சகலருக்கும் துக்கத்தைப் போக்கி சுகத்தைக் கொடுப்பவரே, தீவிர வைஷ்ணவரே, பாடும் திறமை கொண்டவரே.
3. ஏழைகளைக் காப்பவரே, வானர ரூபமுடையவரே, அழகு வாய்ந்தவரே, லோகத்திற்கு விலக்ஷணமானவரே, பாதாள தேவதைகளைக் கொன்றவரே, ராமனை ரக்ஷிக்க அஹிமஹி ராவணர்களைக் கொன்றவரே, சிந்தூரத்தை நிறையப் பூசிக் கொள்பவரே.
4. உலகுக்கெல்லாம் நாயகனே, இன்னும் ஜகத்துக்கெல்லாம் நாயகனே, பிராணனுக்கும் அதிபதியே, மிகப் பழமையானவரே, புண்யவானே, புண்ய நடத்தையுடையவரே, உத்தம பாவனையுடன் பிறரைச் சந்தோஷிக்கச் செய்பவரே.
5. கையைத் த்வஜம் (கொடி) போலத் தூக்கி ஆவேசத்தோடு முன் தள்ளிச் செல்பவர். காலாக்னியும், காலருத்ராக்னியும் அவரைக் கண்டு பயத்தால் நடுங்குகின்றன.
6. ப்ரம்மாண்டத்தை அளந்தவரோ என்னவோ தெரியவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு கண்களிலிருந்து நெருப்பு ஜ்வாலைத் தெரிக்கப் பலமாக நெற்றியை நெரிப்பவர்.
7. தன் வாலைத் தலைவரையில்வளைத்து அழகிய குண்டலங்களையும், கீரிடத்தையும் அணிந்து இடுப்பில் பொன் ஒட்டியாணத்தையும் அணிந்து தங்கக் கச்சத்துடன் செல்லும் போது நகரா (பேரிகை) அடிப்பது போல ஒட்டியாணத்தின் மணிகள் ஒலிக்கின்றன.
8. வாலினால் பர்வதத்தை நன்றாக உதைத்துத் தள்ளி ஆகாயத்தில் செல்லும் போது அவருடைய பளபளப்பாக ஜ்வலிக்கும் சரீரம் மகத்தான மின்னல் கொடி போல்



www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

இருக்கிறது.

9. கோடிக்கணக்கான தாண்டுதலைத் தாண்டி வடக்கு திசை சென்று மந்த்ராத்ரியிலிருந்த த்ரோண பர்வதத்தை க்ரோத ஆவேசத்துடன் வேறுபடுத்தினார்.

10. மலையைக் கொண்டு வந்து மறுபடியும் கொண்டு போய் வைத்துவிட்டு மனோவேக மாய்த் திரும்பினாரே, அச்சமயம் மனோ வேகம் போதாமல் போனதால் அதையே பின் விட்டு போன வேகத்தை எப்படி அளவிட முடியும்.

11. சிறு வடிவிலிருந்து ப்ரம்மாண்டமான ரூபத்தை எடுத்து வண்ணம் கோளகம் முழு வதும் வ்யாபித்தவராய் வஜ்ரமான வாலைச் சுற்றிக் கொண்டார்.

12. அவருக்கு உபமானம் எது? மேரு மந்த்ர பர்வதமெல்லாம் மிகச் சிறியவை. இந்தப் பிரம்மாண்டம் முழுதும் அவரை ஒப்பிடப் வேறு எதுவும் இல்லை.

13. சிவப்பான சூர்ய மண்டலத்தை எவர் விழுங்கி னாரோ, மேலும் விஸ்வரூபம் எடுத்த போது வளர வளர பிரம்மாண்டத்தையே போதித்தாரே, அவரே ஸ்ரீ ஆஞ்சநேயர்.

14. பூத, பிரேத ஸம்பந்தங்கள், ரோகம், வியாதி முதலியன, கவலை முதலிய கஷ்டங்கள் இந்த பீமரூபி ஸ்தோத்திரத்தினால் நசிந்து இருப்பிடம் தெரியும். தரிசனத்தினால் ஆனந்தமுண்டாகும்.

15. இந்த சந்திரகலை (பிறை) போன்ற பதினைந்து ஸ்லோகங்களைக் கடைபிடியுங்கள். அவை களை ஜபிப்பதனால் லாபமும், அழகும், த்ருடதேஹமும் ஏற்படும். இதில் ஐயமில்லை.

16. இதைத் துதிப்பதால் செல்வம், தானியங்கள், வம்சவிருத்தி, நல்ல ஸ்வபாவம், ரூபம், வித்யை முதலியன கிடைக்கும்.

17. ஸமர்த்த ராமதாஸர் கபிகுல பூஷணமான ஆஞ்சநேயரை உபாசிப்பதில் முதல்வர். அந்தர்யாமியான ராமரைத் தரிசிப்பதாலும், தியானிப்பதாலும் எல்லாவிதமான தோஷங் களும் விலகும்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593



# இரண்டு வகை செம்பு

இரசவாதத்தில் செம்பு பெரிய அளவில் பயன் படுத்தப் பட்டிருக்கிறது. செம்பை பொன்னாகவும், பொன்னை செம்பாகவும் மாற்றிடும் உத்திகளும் சித்தர்களால் அருளப்பட்டிருக்கிறது.

தங்கம், வெள்ளியை விட செம்பு உயர்ந்தது என்கிறார் போகர். தங்கமும், வெள்ளியும் உடல் என்றால் அவற்றை முழுமையாக்கும் உயிராக செம்பை குறிப்பிடுகிறார். அதாவது சிறிதளவு செம்பு சேர்த்தால் மட்டுமே தங்கமும், வெள்ளியும் பயன்படுத்த முடியும் என்கிறார்.

போகர் தனது "போகர்–7000" என்கிற நூலில் செம்பின் இரு வகைகள் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

"ஆச்சென்ற செம்புதனில் இரண்டு பேதம்
அதன் விரிவு எதென்றாக்கால் சொல்லக் கேளு
ஒச்சென்ற நேர்பாளம் என்னும் செம்பு
உத்தமந்தான் மிகுதியுமென் றறிந்து கொள்ளு
மேச்சென்ற மிலேச்சன் தான் என்னும் செம்பு
மிகுதியுந்தான் மத்திபமென் ற்றிந்து கொள்ளு
மேச்சென்ற மிலேச்சன் தான் என்னும் செம்பு
மிகுதியுந்தான் மத்திபமென் றறிந்து கொள்ளே"

செம்பில் இரண்டு வகை இருப்பதாகவும், அவற் றில் நோபாளம் என்பது உத்தம வகையைச் சேர்ந்தது என்றும், மிலேச்சன் என்பது மத்திம வகையை சேர்ந்தது என குறிப்பிடுகிறார். மேலும் அவற்றின் குணாதிசயங்களை பின்வருமாறு கூறுகிறார்.

"அறிந்துமேதான் உத்தமத்தின் குணத்தைக் கேளு
அழுத்தமான மழுங்கலாக பார மாகி
செறிந்துமேதான் சிவப்பாகி அடிக்க அடிக்க
தீர்க்கமாக மிருதுவாய்த்தான் காய்ச்சினாக்கால்
வெறிந்துமேதான் விகாரகுண மில்லா தானால்
மிகுதியுமே உத்தமந்தான் இந்தச் செம்பு
மறிந்துமேதான் மத்திபத்தின் குணத்தைக் கேளு
மகாவெளுப்பு கருப்போடு சிவப்பு மாமே"

உத்தம வகை செம்பானது அழுத்தமாகவும், மழுங்கலாகவும், பாரமாகவும் இருக்கும். இவை நன்கு செறிவான சிவப்பு நிறத்தைக் கொண்டது. நன்கு அடிக்க அடிக்க மிகவும் மென்மையாகும் தன்மை கொண்டது. மேலும் இதனை உருக்கினால் விகாரமடையாது. இதுவே நேர்பாளம் என்னும் உத்தம செம்பாகும் என்கிறார் போகர்.

"சிவப்பாகி கடினமாகி உத்தமத் துக்குச்
சிதைந்து மேதான் பெரிதாகி இருப்பதாகி
சிவப்பாகி கழுவவேக ழுவவே தானும்
ஏற்றமான கருப்பதாக இருப்பதானால்
மிவப்பாகி மிலேச்சமென்ற செம்ப தாகும்
மிகுதியுமே மத்திபந்தான் இன்னங் கேளு
துவர்ப்பாகி சுரோணிதவண் ணமிக வெளுப்பு
சுத்தமான கருங் கருப்பு கனமில் லாதே"

மத்திம வகை செம்பானது வெளிர் சிவப்பு நிறமும், கருமையும் கலந்த நிறத்துடன் காணப்படும். இவை உத்தம வகை செம்பினைப் போல உறுதியாக இல்லாமல் சிதைந்த நிலையில் இருக்கும் என்கிறார். மேலும் இதனை உருக்க வெளிர் நிறம் நீங்கி கருமையடையும் என்றும் கூறுகிறார்.

இந்த வகை செம்பானது கனமில்லாமல் இருக்கும் என்கிறார்.



ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்
• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மீகமலர்.காம்

# ஆன்மீக வழியில் அமைதி - 2

ஆன்மிகம் என்பது வீட்டை விட்டு வெளியேறி ஓடிப்போய் விடுவதோ, தங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் தட்டிக் கழித்து விடுவதோ அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆன்மிகம் என்பது 'நான்' 'என்னுடையது' என்னும் அகப்பற்று, மோகம், தேகப்பற்று, ஆசை போன்ற புறப்பற்று எல்லாவிதமான பற்றுகளையும் மனதளவில் விடுவதே ஆன்மிகம் ஆகும். இத்தகைய பற்றுகள் எல்லாம் தாமரை இலைத்தண்ணீர்போல் நம்மிடம் இருக்க வேண்டும். இப்படி பற்றற்று நாம் வாழ்வதற்கு, அதில் மன உறுதிப்பாடு, மனபக்குவம் பெறுவதற்கு ஆன்மிகம் வழிகாட்டுகிறது. நாம் ஆடம்பரமான வாழ்க்கையில் ஆசையில்லாமல் பற்று இல்லாமல் இருந்தால், அதனால் வரக்கூடிய பணக்கஷ்டம் மனக் கஷ்டம் போன்றவை நம்மை அணுகுவதற்கு முடியாது. அதனால் நாம் விரும்பும் தேடும் அமைதி நம்மைத் தேடி வரும்.

சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், வடலூர் வள்ளலார், ரமணமகரிஷி, ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற அவதார புருஷர்கள் அவர்களின் அனுபவத்தின் மூலம், அவர்கள் கண்ட ஆன்மீக சம்பந்தமான வாழ்க்கைத் தத்துவங்களை அருள்மொழிகளாகவும் பாடல்களாகவும் நமக்குக் கொடுத்துள்ளனர். மனதில் தோன்றும் புதுப்புது ஆசைகளை நமது மனதில் சுமைகள்போல் நீ ஏற்றக்கூடாது. அவ்வாறு மனச்சுமைகளை ஏற்றும் போது, நீ மன அமைதியை இழக்க நேரிடும் என்பதை அறிந்து கொள்' என்று இரமண மகரிஷி அறிவுறுத்தியுள்ளார். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பதிலிருந்து திரு வாசகத்தின் பெருமையை இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. திருவாசகத்தினை ஆழ்ந்து படிப்பதின் மூலம் உள்ளம் உருகும்படி பாடுவதன் மூலம் துன்பத்திலிருந்து விடுபட்டு மன அமைதி பெறலாம்.



மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை, சிக்கல்கள் உடையதாயும் கடினமானதாயும் தங்களது எண்ணங்கள் செயல்பாடுகள் மூலமாக அவர்களாகவே வரவழைத்துக் கொள்கிறார்கள். தற்போது ஆடம்பரமான வாழ்க்கைமுறை பரவலாக உலகெங்கும் மக்களிடம் காணப்படுகிறது. எளிமையான வாழ்க்கைமுறை தற்போது மறைந்து கொண்டு வருகிறது. மக்களால் தேவையில்லாத பழக்க வழக்கங்கள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளை எல்லாம் மாற்றி நிம்மதி பெறவேண்டும் என்றால், பற்றற்ற வாழ்க்கை, தன்னடக்கம், மனத்தூய்மை, அன்புடன் கூடிய தன்னலமற்ற சேவை செய்யும் வாழ்க்கைமுறையை நாம் மேற்கொள்ள வேண்டும். நேர்மையான எளிமையான வாழ்க்கையை நடத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் மனதில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் பக்தியையும் தியானத்தையும் வாழ்க்கையில் கடை பிடித்தால், எல்லாத் துன்பங்களிலும் இருந்து விடுபட்டு மன அமைதி பெறலாம் என்று ஆன்மிகம் நமக்கு வழி காட்டுகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனிதர்கள் இப்படித்தான் உலகில் வாழவேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்திக் கூறும் ஆன்மீக நூல்கள், வாழ்க்கைத் தத்துவங்களை விளக்கும் நூல்கள் ஆன்மீகவாதிகளால் எழுதப்பட்டுள்ளது. வேதாந்த, உபநிடதங்களில் காணப்படும் ஆன்மீகக் கருத்துக்களை, தத்துவங்களை விளக்கும் நூல்கள் உள்ளன. ஆன்மீக சம்பந்தப்பட்ட புத்தகங்களை நாள்தோறும் படித்து , வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும். உபநிடதங்களில் காணப்படும் கருத்துக்களை, அதன் சாராம்சத்தினை அகத்தியர், விசுவாமித்திரர், போகர் போன்ற ஞானிகள், சித்தர்கள் பலரும் தங்கள் அனுபவத்தில் கண்டவற்றை உணர்ந்தவைகளை, தங்களைப்போல் மற்றவர்களும் தெரிந்து கொண்டு, ஆன்மீகத்தில் முன்னேற்றம் காண வேண்டும். மன அமைதி பெற்று உயர்நிலை அடையவேண்டும் என்று நினைத்து ஏடுகளில் எழுதி வைத்துள்ளனர். தாங்கள் எழுதி வைத்துள்ளபடி சித்தர்கள், ஞானிகள் ஆன்மீக வழியில் வாழ்ந்து காட்டி, அதிஉன்னத நிலையும் அடைந்துள்ளார்கள்.

ஆன்மீகம் சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படிப்பதால் மட்டும் ஆன்மீக முன்னேற்றம் மன அமைதி போன்றவை முழுவதும் கிடைப்பதில்லை. ஆனால் ஆன்மீக நூல்களை படிக்கும்போது நமது எண்ணங்கள் அலைபாயாமலும், படிக்கும்போது தீய எண்ணங்கள் எதுவும் நமது மனதில் உருவாகாமலும் நம்மை பாதுகாக்கும். நமது மனதில் ஏற்படும் துன்பங்கள், குழப்பங்களுக்கு ஓர் தீர்வும் மன ஆறுதலும் அப்போது கிடைக்கும் . "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறியதுபோல், நாம் ஆன்மீக நூல்களில் கூறப்பட்டுள்ள வாழ்க்கைத் தத்துவங்களை நன்கு கற்றறிய வேண்டும். கற்றறிவதொடு தகுந்த குருவின் துணையோடு அவற்றை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். அதன்மூலம் நமக்கு ஆன்மீக அனுபவங்கள் ஏற்படுவதோடு மனஅமைதியும் கிடைக்கும். மன அமைதி விரும்புவோர் உலகில் காணும் அநித்தியமான பொருள்கள் மீது பேராசை கொள்ளக் கூடாது.

இதற்கு ஒரு கதை உண்டு. ஒரு பேரரசன் காட்டு வழியாக குதிரையில் செல்லும்போது, அங்கு ஒரு முனிவரை ஆசிரமத்தில் சந்திக்கிறான். அந்த முனிவர் தூய்மையுடையவராகவும் மிகுந்த தவசீலராகவும் இருப்பதைக் கண்ட மன்னன் அவர் கஷ்டப்படாமல் இருப்பதற்கு, ஏதேனும் தான் உதவி செய்ய வேண்டும் என்று நினைத்து, "சுவாமி தாங்கள் தயவுசெய்து என்னோடு நாட்டிற்கு வருகை புரிந்து, நான் அன்புடன் தரும் பொன் பொருள்களைப் பெற்றுச் செல்ல வேண்டும்" என்று பணிவுடன் வேண்டிக் கொண்டான்.



அதற்கு அந்த முனிவர் "மன்னா, நான் வசிக்கும் இந்த வனத்தில் எனது பசிக்கு வேண்டிய இனிய கனிகள் கிடைக்கிறது. நான் அருந்துவதற்கு தேவையான குளிர்ந்த அருவி நீர் கிடைக்கிறது. நான் உடுத்துவதற்குத் தேவையான மரப்பட்டை கிடைக்கிறது. நான் வசிப்பதற்கு பாதுகாப்பான மலைக்குகை இருக்கிறது. இவற்றைத் தவிர இந்த சன்னியாசிக்கு வேறு என்ன வேண்டும். நீ எனக்கு கொடுப்பதற்கு நினைக்கும் பொன் பொருள்களை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய முடியும். நீ அன்புடன் கொடுக்கும் பொன் பொருள்களை நான் பாதுகாக்க வேண்டும். எனக்கு நீ கொடுத்த பொன் பொருள்களை திருடர்கள் கொள்ளையடிப்பதற்கு வந்து விடுவார்களோ என நான் இரவும் பகலும் பயந்து கொண்டு இருக்க வேண்டும். அதனால் என்னோட தவ வாழ்வில் மனநிம்மதிதான் கெடும்" என்று கூறி மன்னன் தரும் பொன்பொருள்களை புன்னகையுடன் மறுத்து விட்டார்.

மனிதன் தேவைக்கு அதிகமாக பணம், சொத்துக்கள் வைத்திருந்தால் அவனது மனநிம்மதி கெடும் என்பதை முனிவரின் வார்த்தைகளை வைத்து நாம் அறிந்து கொள்ளலாம். புத்தர் "ஆசையே துன்பத்திற்கு காரணம்" என்று மிக எளிதாக நமக்கு இதனை போதித்து விட்டார். நமது வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வைத்துக்கொண்டு அதனை அனுபவித்துக் கொள்ளலாம். ஆனால் அவற்றின் மீது மிகுந்த பற்றுக் கொள் ளாமல் பற்றற்றுமுறையில் வாழ்க்கை நடத்தினால், மன அமைதி தானாக உங்களைத் தேடி வரும்.

மனிதன் இந்த பொய்யான பட்டங்கள், பெயர், புகழ், மரியாதை போன்றவற்றை பெறுவதால் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம் என்று நினைக்கிறான். இவை அனைத் தும் உனக்கு தற்காலிகமான மகிழ்ச்சி யாகத்தான் இருக்கும் என்று ஆன்மீகம் கூறுகிறது. இவை அனைத்தும் பெற்று பற்றற்று நாம் அனுபவவித்து மகிழலாம். ஜனக மன்னன் எதிலும் பற்றற்றவராக மிதிலை நாட்டை ஆட்சி புரிந்து இல்லற ஞானிபோல் இருந்தார். அவர் எந்தச் சூழ்நிலையிலும் அதாவது துன்பத்தில் இன்பத்தில் இருந்தாலும் சமநிலையில் மனநிம்மதியுடன் இருந்தார் என்பதை இராமாயணம் ஜனக மன்னரைப்பற்றி சுட்டிக் காட்டுகிறது. பணம், பதவி, புகழ் ஆகியவற்றை பற்றற்ற முறையில் அனுபவிக்க வேண்டும். மனிதன் பற்றில்லாமல் வாழ்வது, அதற்குரிய மன பக்குவத்தை அடைவது போன்றவை எளிதான காரியமல்ல. அதற்கு நாம் மிகவும் கஷ்டப்பட வேண்டும். ஆனால் பொறுமையும் விடா முயற்சியும் மன உறுதியும் இருந்தால், பற்றற்று வாழ்வது மிகவும் எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்து, நாளடைவில் பற்றற்றமுறை வாழ்வாகவே மாறி விடும் என்று ஆன்மிகம் கூறுகிறது.

(அமைதி தொடரும்)

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
கோட்டக் கலால் அலுவலர் (பணிநிறைவு)
கைபேசி: 9894043308

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

சந்தா இல்லை
நன்கொடை இல்லை

வெற்றிகரமாக

# 100வது இதழை நோக்கி

உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும்

## நம்பர் 1 இணைய இதழ்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் மாதம்
இரண்டு இ–புத்தகமாக வெளிவரும் நமது இதழின்

**100வது இதழ் 100 பக்கங்களுடன்**

இதுவரை வெளி வந்த முக்கிய
ஆன்மிக தகவல்களுடன் பொக்கிஷமாக
வெளிவரவிருக்கிறது...

## பாதுகாக்க வேண்டிய பொக்கிஷத்தை விரைவில் எதிர்பாருங்கள்....

www.aanmeegamalar.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்.